விலை ரூபா 5.00

# ஈழநாடு வாரமலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 07 இதழ் 106
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 21 - 5 - 1995

உள்ளே ...

★ வரலாற்றுத் தவறு மீண்டும் உருவாகிறது — பக்கம் 3
★ தீவுகளின் இராஜகுமாரி எப்படி இந்து சமுத்திரத்தின் பிச்சைக்காரியானாள் — பக்கம் 4
★ நக்ரோமா - சிறுகதை — பக்கம் 5
★ சுதந்திரத்துக்காக தீக்குளிக்கும் செச்னியா — பக்கம் 6
★ தமிழீழத்துக்கு பொருத்தமான மாற்றுச் சக்திவளம் — பக்கம் 7
★ சர்வதேச அரங்கில் — பக்கம் 8
★ இவ்வாரம் எப்படி? — பக்கம் 9
★ சிறுவர் மஞ்சரி — பக்கம் 10


## பத்தாயிரம் தமிழர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் கடந்த ஒரு மாதத்தில் 10,000 தமிழர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 19ம் திகதிக்குப் பின்பே இக் கைதுகள் இடம்பெற்றுள்ளன. அண்மை நாட்களாக தினமும் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தினமும் 500 தமிழர்

[11-ம் பக்கம் பார்க்க]



கடல் தடைச் சட்டத்தால் கரையில் ஏங்கிநிற்கும் நெஞ்சங்கள்
படம்; (தேவா)

யாழ். ஆஸ்பத்திரிக்கு

## டீசலை எடுத்துச் செல்ல படையினர் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனா வைத்தியசாலைக்கான இம் மாத கோட்டா டீசலை கப்பலில் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்க பின்னடித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வைத்தியசாலைக்கான டீசல் வருவதில் கால தாமதம் ஏற்படும். மேலும் டீசலை மட்டுப் படுத்திப் பாவிக்குமாறு கொழும்பில் தங்கியிருக்கும் போதனா வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் வைத்தியசாலைக்கு அறிவித்துள்ளார். -170

# ★ "மாறி வரும் உலகின் நவீன அறிவியலுக்கு ஏற்றதாக சட்ட முறை உருவாக்கப்பட வேண்டும்"

## தேசியத் தலைவர் பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)

எமது தேசிய இனத்தின் பண்பாட்டிற்கு அமையவும் மாறிவரும் உலகின் நவீன அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் எமது சட்ட முறை உருவாக்கப்படவேண்டும் என்று தமிழீழ தேசிய தலைவர் திரு.வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.



நேற்று இடம்பெற்ற தமிழீழ நீதியாளர்களின் உறுதிப் பிரமாண வைபவத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையில் தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது, எமது தேசத்தை அடிமைப் படுத்திய அந்நியர்கள் எமது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தைக் கொண்டு வர முயன்றார்கள்.

தமது சட்டங்களையும் திணித்தார்கள். அன்று அடிமைப்பட்ட மக்களாக நாம் வாழ்ந்ததால் பலத்தின் மூலமாக அந்நியர்கள் எமக்கு திணித்த சட்டங்களை நாம் ஏற்றுக்கொள்ள நேர்ந்தது.

ஆனால் இன்று நிலைமைவேறு இப்பொழுது நாம் எமது

(11ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவை கூட்டணி 30-ம் திகதி சந்திக்கும்

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வு குறித்து ஆராய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எதிர்வரும் 30ம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து பேச்சுக்கள் நடாத்தவுள்ளனர்.

கடந்த 17ம் திகதி நான்கு தமிழ் கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து இனப் பிரச்னை தீர்வு பற்றி பேச்சுக்கள் நடாத்தியபோது அதில் கூட்டணி பங்குபற்றவில்லை. எனினும் தாங்கள் வேறொரு தினம ஜனாதிபதியை சந்திக்

[12ம் பக்கம் பார்க்க]

## இந்தியாவிடம் இராணுவ உதவியை இலங்கை அரசு கோரவில்லை

(கோலாலம்பூர்)

இலங்கையில் யுத்தத்தை அடக்குவதற்கு இலங்கை இந்தியாவிடம் இராணுவ உதவி கோரவில்லை என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்தெரிவித்துள்ளார்.

மலேசியா சென்றுள்ள திரு. கதிர்காமர் அங்கு. மேலும் பேசுகையில்:

இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் குறுகிய கடல் பிராந்தியத்தில் இந்தியா கண்காணிப்பு தீவிரப்படுத்தியுள்ளபோதும் இலங்கை அரசு இந்தியாவிடமிருந்து இராணுவ உதவி எதனையும் கோரவில்லை.

பேச்சுவார்த்தையினால் ஏற்படும்தீர்வின்மூலமே பிணக்கை முடிவுக்குக் கொண்டுவர முடியும். சமாதானத்திற்கான கதவு எப்போதுமே திறந்துள்

(12ம் பக்கம் பார்க்க)

நுரைவளம் மிக்க மில்க்வைற்
உற்பத்திகள் சலவையைத் துரிதமாக்குகின்றன. மில்க்வைற் மேலுறைகள் வெற்றுப் பக்கற்றுகள்சேர்ப்பித்துப் பரிசு பெறுங்கள்.
"மில்க்வைற்"

மில்க்வைற் சலவைத்தூள்
தன் நுரைவளத்தால் சீருடைகளை அழுக்ககற்றி வெண்மையாக்குகிறது.
25 வெற்றுப் பக்கற்றுகளுக்கு ஒரு அப்பியாசக்கொப்பி அன்பளிப்பு.
"மில்க்வைற்"

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1464)

### முறிவு நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் முறிவு நோவு வைத்தியம் புதிய இடத்தில் சனி, ஞாயிறு தவிர்த்து காலை 9 00 முதல் மாலை 4-00 வரை இல. 50, கண்டி வீதி, சுண்டிக்குளி. யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. சி-1481)

### Maths English 95

O/L Distinction Credit பெறுபேறடைய 3 மாதங்களில் ஆம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். (ஆண்டு 9, 10 உட்பட) ஆசிரியர் B. Sc. 85. சிவன்கோவிலடி, சிவன் கோவில் மேற்குவீதி, திருநெல்வேலி. (சி-1478)

### 95, 96 புவ வருட பலா பலன்கள்

எல்லா ராசிகளுக்கும் என்களுக்கும் பலன்கள் சண்மாஸ்ரர் எழுதிய நூல் எங்கும் கிடைக்கும். எம்மிடம் மொத்தமாகவும் சில்லரையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சோபிதா 363, கே. கே. எஸ். சாலை, யாழ்ப்பாணம். (சி- 1482)

### ந. சுந்தரம்பிள்ளையின் அக்கரைச் சீமையில்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில் 50/- இங்கிலாந்து சென்ற ஓர் அழகிய இளம் தமிழ்ப் பெண்ணின் கதை. (சி- 1483)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(பண்டத்தரிப்பு)

சங்கானை ஐக்கிய நன்புரிச் சங்கம தனது 22ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு செற் அப், ஓவர் ஆகிய இரு முறைகளைக் கொண்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்த உள்ளது.

இந்த கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி சங்கானை புனித சலோசியார் ஆலய முன்றலிலுள்ள மைதானத்தில் இம்மாதம் 30ம் திகதியன்று தொடக்கம் ஆரம்பமாகிநடைபெறவிருப்பதாகவும் இப்போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்பும விளையாட்டுக் கழகங்கள் தங்கள் விண்ணப்பங்களை இம்மாதம் 25ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும் என்றும சங்கானை ஐக்கிய நலன்புரிச்சங்கத்தின் கௌரவ செயலாளர் திரு செ. குமாரசிங்கம் தெரிவித்தார். (72)

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். தொல்புரம் கிழக்கு பிக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு இன்று 21-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நிலையத்தலைவர் திரு தி. உதயசூரியன் தலைமையில் இடம் பெறும். 154

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ. து.) யாழ். பிரதேசச் செயலாளர் பிரிவு த்ராந்திய சபையின் அங்கத்தவர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு யாழ் சென் சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் சபையின் தலைவர் திரு மோசேஸ் எட்வேட் தலைமையில் நடைபெறும். 154

0 0 0

(யாழ்ப்பாணம்)

வேலணைத்தீவுப்புலவர்கள் வரலாறு வெளியீட்டு விழா இன்று 21-ம் தேதி ஞாயிறு மாலை 4.00 மணியளவில நாவலர் காலார மண்டபத்தில் வேலணை ப. நோ கூ சங்கத் தலைவர் திரு. பொ. புாசிலாமணி தலைமையில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யோகர் சுவாமிகளின் பிறந்த தினம் இன்று 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அதிபர் ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'அருளிசைச் செல்வர்' வே. சிவஞானக்கின் பிராத்தனை வழிபாடு என்பன இடம்பெறும். 170

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை ஆதரவில் குப்பிழான காசிவாசி செந்திநாதையர் ஞாபகார்த்தப் பேருரையும் இந்து தர்மம் மலர் 08 வெளியீட்டு விழாவும் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று 21-ம் திகதிஞாயிற்றுக்கிழமை முப 9.00 மணிக்கு ஆத்மஜோதி திரு நா முத்தையா தலைமையில் நடைபெறும்.

## கருத்தரங்கு

(வேலணை)

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினரால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில பிரதிநித்துவம வகித்து வருகின்ற பிரதி நிதிகளுக்கிடையிலான ஒன்றிணைந்த கூட்டுறவுக்கல்வி அபிவிருத்தி திட்ட கருத்தரங்கொன்று இன்று 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிககு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக்கருத்தரங்கில் கூட்டுறவு கல்விப் பயிற்சியளிப்பு உத்தியோகத்தர் திரு கே. சிவராசசுந்தரம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் திரு க. சிவசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவர், 75


## மில்க்வைற்




நீல சோப் ரூபா 7/-

அரைக் கட்டி ரூபா 3/50

அரை பார் சோப் ரூபா 20/-

மேலுறைகளுக்கு பரிசில்கள் உண்டு

(எ- 4934)

சென் ஜோன்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணம்.

ஆண்டுப் பரிசளிப்பு விழா

## அழைப்பு

காலம்: 27 - 05 - 1995

நேரம்: காலை 9-30 மணி

இடம்: பீற்றே ஞாபகார்த்த மண்டபம்

பிரதம அதிதிகள்

வைத்திய கலாநிதி

து. வி. ஜெயகுலராஜா

(மருத்துவ அத்தியட்சகர், யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலைகள், ஆனைப்பந்தி)

&

திருமதி கிறீஸ்டினா

ஞானதிலகராணி ஜெயகுலராஜா

★ பெற்றோர், பழைய மாணவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

—அதிபர், ஆசிரியர். மாணவர்

(ஏ- 4919)


# செய்திச்சுருக்கம்

### மணிஏற்றல் வைபவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலயத்தில் கட்டி முடிக்கப்பட்ட மணிக்கூட்டுக்கோபுரத்தில் புதிய மணிஏற்றும் வைபவம் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றது. 154

### உணவுப் பொருள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் சித்திரை, வைகாசி மாதங்களுக்கான மாணவர்களின் உணவு முத்திரைக்கு பொருட்களை சங்கக் கிளைகள் ஊடாக வழங்கி வருகின்றது. 72

### நியமனம்

(யாழ்ப்பாணம்)

வைத்திய கலாநிதி வேலாயும்பிள்ளை குமூர்த்தி வடக்கு கிழக்கு மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சினால் சித்த மருத்துவதுறை அபிவிருத்தி ஆலோசனை சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### சுயசார்பு கடன்

(கொழும்புத்துறை)

தமிழர் புனர் வாழ்வுக்கழக பனைப் பிரிவினர் இப்பகுதியில் உள்ள மொத்தம் பதினொரு பயனாளிகளுக்கு சுயசார்புக்கடனாக அறுபத்து ஐந்து ஆயிரம் ரூபாவைக் கடந்த மாதம் வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 154

### கருத்தரங்கு

(நெலலியடி)

வடமராட்சிப் பகுதியில் போர்க்கால கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

கலை பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் திரு இ. ம. அன்பரசன் மகளிர் அமைப்மைச் சேர்ந்த செல்வி சந்திரிகா ஆகியோர் கருத்துரை வழங்கி வருகின்றார்கள். 160

### சங்காபிஷேக விழா

(உடுவில்)

கல்வளை ஸ்ரீ பரமானந்தப் பிள்ளையார் கோவில் மண்டலாபிஷேக சங்காபிஷேக விழா நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது பகல் சங்காபிஷேகமும் இரவு திருவூஞ்சலும் நடைபெறும். சங்கீதபூஷணம் திரு. வி கே நடராசாவின் இசைக்கச்சேரி சைவப்புலவர் பொன் தெய்வேந்திரனின் சமயச்சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

### ஆங்கிலப் போட்டி

[உடுவில்]

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில சொல்வதெழுதல் போட்டி 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும். ஏற்கெனவே கோட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றி முதல் இரு இடங்களை பெற்றவர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். 109

### சமய அறிவுப் பரீட்சை

[கொழும்புத்துறை]

யாழ். நவாலி அட்டகிரி ஸ்ரீமுருகன் ஆலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை தினத்தை முன்னிட்டு ஆலய வழிபடுவோர் சங்கம் நவாலி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல பாடசாலைகளிலும் சமய அறிவுப்பரீட்சை ஒன்றை நடாத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. -154

### 15 விறகு வியாபாரிகள் கைது

(நெல்லியடி)

சட்ட விரோதமான வகையில் காடுகளிலிருந்து விறகு வெட்டிக் கொண்டு சயிக்கில்களில் சென்ற சுமார் 15 விறகு வியாபாரிகளை அம்மன் பகுதி

(11-ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் நலன்கருதி நூல்நிலயம்திறப்பு

(கொழும்பத்துறை)

சங்கானையிலுள் நீதிவான் அகதிமுகாமிலுள்ள இடம் பெயர்ந்த மக்களின் நலன் கருதி 'போறூட்' நிறுவனம் அண்மையில் நூல் நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது.

திரு. எஸ். இராஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற திறப்புவிழா நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலர் திரு. கா. சந்திரராசா கலந்து கொண்டனர்.

சங்கானை பொதுநூலக நூலகர் திரு. மா. கணேஷ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். முகிலன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள். (154)

## 6000 வாளிகள் கோமாரியி ல்வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்திற்கு 'கோமா ' கப்பலில் 6, 000 வாளிகள் வந்துசேர்ந்துள்ளன.

வாளிகள் கப்பலில் இருந்து உடனடியாக இறக்கப்பட்டு சமாசத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இதனைவிட கால்நடைதீனி, மல் லிஎன்பனவும்சமாசத்திற்கு 'கோமாரி'யில் வந்துசேர்ந்துள்ளன. 170-சி

## 2210 அசிரியர்கள் பயிற்சிக்காக தெரிவு

(கொழும்பு)

சுமார் 2210 பயிற்சி ஆசிரியர்களும், சான்றுபெறுத ஆசிரியர்களும் பயிற்சி கல்லூரிகளில் அனுமதிப்பதற்காக தெரிவு செய்யப்படவிருக்கின்றன

இவர்களில் 75 சதவீதமானவர்கள் பயிற்சி ஆசிரியர்களாவர். 25 சதவீதமானவர்கள் சான்று பெறுத ஆசிரியர்கள்.

இவர்களில் 1330 பேர் சிங்கள மொழியிலும் 880 பேர் தமிழ் மொழியிலும் பாடநெறிகளைக் கற்பார்கள்.

போதான நூலகம் யாழ்ப்பாணம் ளோ நூலகம்.

## வாரசாரம்

வரலாற்றில் ஏற்பட்ட பிழைகளை திரும்பவும் விடாது நடப்பதன்மூலமே சமுதாயம் முன்னேறுகிறது. இதற்கு விதிவிலக்கானவர்கள் சிறிலங்காவின் சிங்களத் தலைவர்கள். முன்னையவர்கள் விட்ட பிழைகளைத் தாமும் விடு

பட, ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நாடுகள் தம் ஆயுத தயாரிப்புகளுக்கு சந்தை வாய்ப்பைத் தேடிக்கொண்டு நிற்பவை. இஸ்ரேலும் அவ்விதமே. அந்நாடுகள் தாம் இராணுவ உதவி தருவதாக சந்திரிக்காவுக்குக் கூறியுள்ளனர். எத்தகைய உதவிகளைச் செய்யப் போகிறார்களோ பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். அதற்குக் கூலி என்ன?

### இஸ்ரேல்

இஸ்ரேல் முன்னர் சந்திரிக்

வில் இலங்கையில் இந்திய தலையீட்டைப் பார்த்துக் கொண்டு அவை சும்மா இருக்கப்போவதுமில்லை.

### இடைக்கால ஆலோசனை

இந்த நிலையில் இந்தியத் தலைவர்களுக்கு கால அவகாசம் தேவை. அதேநேரத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் வேறு நாடுகளின் உதவியை சிறிலங்கா நாடக்கூடாது என்றும் இந்தியா கருதுகிறது. அதற்காக போர்முனைத் தேவைகளுக்கு

# வரலாற்றுத் தவறு மீண்டும் உருவாகிறது

வோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றனர்.

முன்னைய பிரேமதாசா அரசாங்கம் ஜே. வி. பி. யினரின் நெருக்குவாரத்துக்குத் தாக்குப் பிடிக்கமுடியாமல் இந்திய ஆக்கிரமிப்புப்படையை வெளியேறுமாறு கேட்கவேண்டிய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. அவர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்பு இராணுவத்தை இலங்கையில் இருந்து அகற்றவும் முடிந்தது. தனது தேவை முடிந்தவுடன் பேச்சு வார்த்தையை இழுத்தடித்து வந்த பிரேமதாசா, ஒரு காலத்தில் ''எல்லாம்'' கொடுப்பேன் என்று தம்பட்டம் அடித்தவர், படிப்படியாகப் பின்வாங்கி இறுதிக் கட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியுடன் புதிதாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு விடுதலைப் புலிகளுடனான

காவின் தாயாரான திருமதி சிறிமாவோவின் காலத்தில் தன் தூதரகத்தை சிறிலங்காவில் மூடும்படி கேட்கப்பட்ட நாடு. முஸ்லிம்களினதும், முஸ்லிம் நாடுகளினதும் செல்வாக்கைப் பெறுவதற்கே சிறிமாவோ இஸ்ரேலிய தூதரகத்தை மூடும்படி கோரினார். பிரேமதாசா காலத்தில் அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு ஒன்றைத் திறப்பதற்கான முயற்சி கடும் எதிர்ப்பு காரணத்தால் தவிர்க்கப்பட்டது. இந்த நிலையில்தான் சந்திரிக்கா இஸ்ரேலிடம் இராணுவ உதவி கோரியுள்ளார். அதற்கு விலையாக எதைக் கொடுக்கப்போகிறார்களோ இருந்துதான் பார்க்கவேண்டும்.

### காலனித்துவம்

பிரான்ஸ் இராணுவ உதவி தருவதாகக் கூறிக்கொண்டு

**ச. தியாகராசா**

பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டார்.

### ஜனாதிபதித் தேர்தல்

திருமதி சந்திரிக்கா குமாரதுங்கவும் பிரேமதாசா பின்பற்றிய வழியை தானும் பின்பற்றத் தொடங்கியுள்ளார். பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றிபெறுவதற்கு மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு ஜனநாயகம்சமாதானம் பேச்சு வார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு என்றெல்லாம் தாராளமாகக் கதைத்ததுமல்லாமல் உண்மையில் பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்பட்டது. சிறிலங்கா மக்களும் சமாதான விரும்பிகளாக போரை இல்லாது செய்யும் நோக்குடன் பெரும்பான்மை வாக்குளால் சந்திரிக்காவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தார்கள்.

ஆரம்பத்தில் பேச்சுவார்த்தையில், சமரசத் தீர்வில் ஆர்வம் காட்டியதுபோல் நடித்த சந்திரிக்கா படிப்படியாக பேச்சுவார்த்தைகளிலிருந்து பின்வாங்கி அதற்கு முற்றுப்புள்ளிவைப்பதற்கான வழிகளில் ஈடுபட்டார். போர் தொடங்குவதற்கு காரண கர்த்தாவாகவும் செயல்பட்டார்.

### ஆயுத விற்பனை

போரின் உக்கிரத்தைத் தாக்குப் பிடிக்கமுடியாத சந்திரிக்கா உலக நாடுகளிடம் குறிப்பாக இந்தியாவிடம் இராணுவ உதவிவேண்டி நிற்கிறார். மேற்கத்தைய நாடுகளும் அமெரிக்காவும் சூடு கண்ட பூனைகள். அமெரிக்கா பாதுகாப்புக்குத் தேவையான இராணுவ உபகரணங்களைத் தருவதாகவும் தாக்குதலுக்கு உபயோகிக்கும் ஆயுதங்களை தரமுடியாது என்றும் கூறியுள்ளது. சந்திரிக்கா உதவி கோரிய மேற்கத்திய நாடுகளில் அநேகம் ரஷ்யா உட்

இராணுவ ஆலோசகர்களை அனுப்பியுள்ளது. இவ்வுதவியைச்சந்திரிகா தன்னுடைய சொந்த செல்வாக்கினால், அதாவது தனது பிரெஞ்சுப் பின்னணியைக் கொண்டு பெற்றுள்ளார் என்றுகூறப்படுகிறது. பிரான்சில் சமீபத்தில் நடந்துமுடிந்த தேர்தலில் சோசலிசக் கட்சியினர் தோற்கடிக்கப்பட்டு பழமை பேணும் கட்சியினர் ஆட்சிக்கு வந்துள்ளமையும் ஒரு காரணமாய் இருக்கலாம். பிரெஞ்சு ஆட்சியாளர்கள் தமது பழங்கால காலனித்துவ சாம்ராச்சிய கனவு காண்கிறார்களோ தெரியவில்லை.

இவற்றை எல்லாம்விட சந்திரிக்கா அம்மையார் இந்தியாவின் செல்வாக்குக்கு உட்பட்டவராகவும் உள்ளார். இந்தியாவின் இராணுவ உதவியையும் மிகவும் வேண்டி நிற்பவராகவும் காணப்படுகிறார். இந்தியாவும் ஏற்கனவே இங்கு வந்து மூக்குடைபட்டதை மறக்கவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் தன் கைவரிசையைக் காட்டவும் தவறாது. ஆனால் இன்று இந்தியா ஒன்றும் செய்ய இயலாத நிலையில் உள்ளது.

### இந்திய தேர்தல்

இந்தியாவில் விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும். நரசிம்மராவின் காங்கிரஸ் கட்சி வெற்றியடையுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இந்த நிலையில் அதுவும் காஸ்மீர், பஞ்சாப், நேபாளம் போன்ற பிரச்னைகள் உச்சகட்ட நெருக்கடியில் உள்ள வேளையில் தென்பகுதி மக்களை பகைத்துக்கொள்ள காங்கிரஸ் தயாராக இல்லை. இலங்கை விவகாரத்தில் நேரடித்தலையீட்டைச் செய்வதற்கு இந்தியப் பொதுமக்களின் அபிப்பிராயமும் மாறாக உள்ளது. பத்திரிகைகளின் செல்வாக்கு மிகவும் அதிகமாய் உள்ள இந்தியா

இடைக்கால ஏற்பாடாக பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளிடமிருந்து பொருத்தமான இராணுவ உபகரணங்களை பெறுமாறு சிறிலங்காவிற்கு இந்தியா ஆலோசனை வழங்கியுள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளன. வெளி உலகுக்கு இல்லை என்று மறுத்தாலும் பாக்கு நீரிணைப் பகுதியில் செல்லும் கப்பல்களை கண்காணிக்கும் வேலையை இந்தியா துரிதப்படுத்தியுள்ளதும் தெரிகிறது.

### அரசியல் புத்திமதி

அரசியல் ரீதியாகவும் இந்தியா சிறிலங்காவுக்கு சில ஆலோசனைகளை வழங்கியிருப்பது சந்திரிக்காவின் சமீபத்தைய நடவடிக்கைகளில் இருந்து ஊகிக்கக்கூடியதாக உள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தவிர்ந்த ஏனைய உதிரித் தமிழ்க்குழுக்களுடன் சந்திரிக்கா பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். தமிழ்ப் பிரதேசத்தின் எல்லைகளை மீள வரையறை செய்தல், ஐக்கிய இலங்கைக்குள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதி



காரங்களில் சிலவற்றை விரிவாக்கம் செய்தல் போன்ற விடயங்கள் இப்பேச்சுவார்த்யைின்போது பேசப்பட்டனவாம். அரசியல் தீர்வுத்திட்டமொன்று விரைவில் முன்வைக்கப்படும் என்றும் கூறப்பட்டதாம். இவ்விவகாரம் இந்தியாவின் தூண்டுதலாலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளதென்றும் அவ்விதம் செய்வதால் மக்களை ஒரு மயக்க நிலையில் வைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம். இதற்கெல்லாம் தமிழ்மக்கள் என்ன முட்டாள்களா?

### அதிகாரமற்ற ஜனாதிபதி

உதிரித் தமிழ் குழுக்களுடனான பேச்சு வார்த்தையில் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னையோடு சம்பந்தப்பட்ட விடயங்களான வடக்கு—கிழக்கு மீன வரை கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பது, கிளாலிப் பாதையை உத்தியோகபூர்வமாகத் திறந்துவிடுவது, வட பகுதிக்கு பொருட்களை எடுத்துச்செல்லும் லொறிகளை தடுத்துவைப்பதைநிறுத்துதல் போன்ற அம்சங்கள் எழுப்பப்பட்டபோது இராணுவத்துடன் கேட்டுப் பதில் சொல்

(10-ம் பக்கம் பார்க்க)

## நமது பார்வையில்....

### எதனைப் பேணவேண்டும்?

பண்பாடு மிக்க தமிழ்ச் சமுதாயம், இன்று தன்னைத் தொடர்ந்தும் தமிழ்ப் பண்பாடுள்ள சமுதாயமாகவே நிலைநிறுத்தப் போராட வேண்டியுள்ளது!

இன்று — வறுமை, வேலையின்மை போன்ற பொருளாதாரக் காரணங்களால், நாட்டுப் பற்று, மொழிப் பற்று, பொது நலம் போன்ற கருத்துக்களைக் கரைந்து போக விடலாமா?

இந்த உயர் எண்ணங்கள், கருத்துக்கள் மீண்டும் துளிர்த்திட வேண்டாமா?

இலக்கியம், சமயம் போன்ற ஊடகங்கள் இதற்கு வழிவகுக்க வேண்டும்!

அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவைக் கண்டு வருந்திய திலகர் என்ன செய்தார்? நாட்டுப் பற்றோடு நல்லுணர்வை ஊட்ட விரும்பினார்; அதற்கேற்ற முறையிலேயே கீதைக்கு விளக்கம் கண்டார்:

வீர வாழ்க்கைக்குரிய நூலாகவே விவேகானந்தரும் கீதைக்கு விளக்கம் தந்தார்.

ஆகவே — இலக்கியங்கள் பேணப்படுவது மாத்திரமல்ல, சமுதாய வளர்ச்சிக்கு உதவிடவும் விளக்கங்கள் தரப்பட வேண்டுமல்லவா?

# சந்திரிகா அம்மையாரின் நேரம் தவறுதல் ஒரு பரம்பரை வியாதி

திருமதிசந்திரிக்கா குமாரணதுங்காதனது உத்தியோகபூர்வ கருமங்களை ஆற்றுவதற்கும், பொது வைபவங்களில் கலந்து கொள்ளும் போதும் நேரத்துக்கு சமூகமளிப்பதில்லை. நேரந்தவறி வந்து சகலருக்கும் தேவையற்ற சிரமத்தை ஏற்படுத்துவது என்றெல்லாம் பரவலாக குற்றம் சுமத்தப்படுகிறது. சிலர் தனது பாதுகாப்பு நிமித்தம் தான் அவர் அவ்விதம் செய்கிறார் என்று சமாதானம் கூறவும் முற்படுகிறார்கள். உண்மை இதுவல்ல. நேரம் கழித்து வந்து மற்றவர்களுக்கு சிரமம் கொடுப்பது திருமதி சந்திரிகாவின் தந்தையாருக்கும் கைவந்த கலையாம்.

இதுபற்றி இலங்கை கம்யூனிஸ் கட்சியின் பொதுச் செயலாளர் காலம் சென்ற திரு. நா. சண்முகதாசன் தன்னுடைய ''பச்சாதாபம் கொள்ளாத பொதுவுடமைவாதியின் வாழ்க்கை வரலாறு'' என்றநூலில்திரு.எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவுடனான தனது நேரடிச் சம்பவத்தை விளக்கியுள்ளார்.

திரு. சண்முகதாசனைப் பொதுச்செயலாளராகக் கொண்ட இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் அரசாங்க ஊழியர்களுக்கு பொருட்களின் விலையேற்றத்துக்குப் பதிலாக வழங்கப்படும் கிராக்கிப்படி தனியார்துறைத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து 1958ம் ஏப்பிரலில் ஒரு பொது வேலை நிறுத்தததில் ஈடுபட்டது. வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்ததால்

தேயிலை, றப்பர் எற்றுமதித் தொழில் மிகவும் பாதிப்பு அடைந்தது. கொழும்பில் நடக்கும் தேயிலை, ஏலம் இடை நிறுத்தப்பட்டது. மூன்று, நான்கு கிழமைகளுக்கு அப்பால் அரசாங்கம் இந்த நிலைமையைத் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பண்டாரநாயக்கா இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்தார். அப்போது இருந்த தொழில் ஆணையாளராக இருந்த ஜி. பி. குமாரசிங்க சண்முகதாசனை மாத்திரம் தனது தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும்படி வேண்டிக்கொண்டார். தொழிலாளர் சார்பில் தங்களின் நிலைப்பாட்டை விளக்குவதற்கு 'சண்' சம்மதித்தார்.

பேச்சுவார்த்தை காலை 10 மணிக்கு நடக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது. சண்முகநாதனும் அப்போது தொழிலமைச்சராக இருந்த ரி. பி. இலங்கரட்னவும் கொழும்பு கோட்டையில் உள்ள மூதவை அலுவலகத்தில் அமைந்த பிரதமமந்திரியின் அலுவலகத்தில் காலை 10 மணியிலிருந்து பிரதமரின் வருகைக்காக காத்திருந்தார்கள். பிரதமர் மாலை 2 மணிக்கு வந்தார் என்றும் ஒருவித மன்னிப்பும் கோரவில்லை என்றும் கூறும் 'சண், நேரம் தவறாது கருமமாற்றும் பண்புக்கும் பண்டாரநாயக்காவுக்கும் வெகுதூரம்'' என்றும் எழுதியுள்ளார்.

- ராஜா

கைத்தொழில் வளர்ச்சியின்மையை மையமாகக் கொண்டு சிங்களத் தலைவர்களின் அரசியல் இராஜ தந்திரத்தினை அதன் நரித்தனத்துடன் விளக்க முற படும் வகையில் மு. திருநாவுக்கரசுவினால் கடந்த ஆண்டில் எழுதப்பட்ட நாலுரு 'ஈழநாடு' வார மலரில தொடர் கட்டுரையாக பிரசுரமாகிறது.

அந் நாலுருவுக்கு மு. தி. எழுதும் முன்னுரை இதோ... — ஆசிரியர்.

# தீவுகளின் இராஜகுமாரி எப்படி இந்துசமுத்திரத்தின் பிச்சைக்காரியானாள்?

## மு. திருநாவுக்கரசு

"இலங்கையைச் சிங்கப் பூராக்குவேன்'' என்று 1977ம் ஆண்டு ஜே. ஆர் சூளுரைத் தார் ஆனல் தொடர்ந்து 17 ஆண்டுகளாக ஐ தே. க. வின் ஆட்சி நீடித்த பின்னரான இன்று இலங்கையில் இருந்து பல்லாயிரக் கணக்கில் வீட்டுப் பணிப்பெண்கள் சிங்கப்பூருக்கு அனுப்பப்படும் நிலையுள்ளது. இலங்கை சிங்கப்பூராகவில்லை. இலங்கை சிங்கப்பூருக்குச் சேவகனுகிறது.

தம்மை அடிமைகொள்ளு மாறு இளம் பெண்கள் எஜமா னியர்களின் கால்களை நோக்கி "கியூவில்,, காத்து நிற்கின்ற னர். இந்த வாரம் 15000 பெண்களுக்கு அனுமதி அடுத்த வாரம் 20.000 பெண் களுக்கு அனுமதி இப்படிப் பட்டியல் நீள்கிறது. இப்படிப் பலநாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களை எஜமானியர் படுத் தும் பாடு நாளாந்தம் பத்திரி கைச் செய்திகளால் அறிந்த விடயமே.

நேற்றுத் தீவுகளின் ராஜகு மாரிஇன்று எஜமானியரின் அடிமைப்பெண் இந்து சமுத் திரத்தின் முத்து இந்து சமுத் திரத்தின் இரத்தத் துளியாய் உள்ளது, புத்தபிரானுல் புனி தப்படுத்தப்பட்ட பூமி என்று மகாவம்சம் கூறுகிறது. ஆனல் இரத்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்ட பூமியாக அது உள்ளது.

ஏனிந்த முரண் நிலை? ஏனிந் தக கதி? யாரிதற்குப் பொறு ப்பு?

''சிங்கப்பூராக்குவேன்'' என்று ஜே ஆர் சொன்னர்' தென்கொரியா வாக்குவேன் என்று பிரேமா சொன்னர். 2000 ஆம் ஆண்டில் புதிய கை த்தொழில் மயநாடாக்கிவிடு வேன் என்று விஜேதுங்கா சொன்னர். புதிய பொருளா தாரப் பாதையில் கைத்தொ ழில் விருத்தி நாடாக இலங் கையை நடைபோட வைப் பேன் என்று சந்திரிகா சொன் ஞர்.

மேற்படி சூளுரைகள் அனை த்தும் பொய்யாய், புளுகாய்' பழங்கதையாய் பையவே சென்றன: பையவே செலகின் றன: பையவே செல்லும்.

ஏன் அப்படி? யாரிதற்குப் பொறுப்பு? தவறு எங்குநிகழ் ந்தது? ஏன்நிகழ்ந்தது?

''இடதுசாரி'' எதிர்ப்பு தமிழின எதிர்ப்பு

உள்நாட்டு வெளிநாட்டு ரீதியாக தேசியக் கொள்கை இன்மை சிறுபிள்ளைத்தன மான பொருளாதாரத் திட்ட மிடல் ஆகிய இவை அனைத் தும் இணைந்து சுவர்க்க புரி யான இலங்கையைநரகலோக மாக்கி விட்டது.

1940 களிலும் 1950களிலும் இலங்கையில் இடதுசாரிகள் மிகவும் பலம பொருந்திய சக் தியாய் மாற்றரசாங்கம் அமைக்கக்கூடிய சக்தியாய் பலம் பொருந்திய ஸ்தாபன அமைப்புக்களைக் கொண்ட சக்தியாய் காணப்பட்டனர்

டி.எஸ் சேனநாயக்கா தலை மையிலான ஐ. தே. க வின் முதலாவது கொள்கை இடது சாரிகளின முதுகெலும்பை முறிப்பது பலம் பொருந்திய இடதுசாரிகளைத் தோற்கடிப் பதற்கு ஈழத்தமிழரையும் அணைத்து வழிநடந்து கூடவே தமிழரையும் தோற்கடிப்பது ஒரு கல்லில் இரு மாங்காய் இதுதான் டி.எஸ் வகுத்த கொள்கை

இடதுசாரிகளின் ஸ்தாபன மயப்பட்ட பலம் தொழிற்சங் களில் இருந்தது தொழிற்சங் கங்களின் வளர்ச்சி இடதுசாரி களின் வளர்ச்சியாகும் கைத் தொழில் வளர்ச்சி தொழிற் சங்கங்களின் வளர்ச்சியை ஏற் படுத்தும்இலங்கையில்தொழிற் சங்கங்கள்என்பது''இடதுசாரி களின்'' பாரம்பரியச் சொத் தாகிவிட்டதால்கைத்தொழில் வளர்ச்சி இடதுசாரிகளுக்குப் பெரும் தொழிலாளர் படை யைத் திரட்டிக் கொடுப்பதா கவே அமையும் எனவே இடதுசாரிகளை வீழ்த்துவ தற்கு கைத்தொழிலாக்கக் கொள்கையை வகுக்காது விடுவதே ஒரே வழி. விவ சாயக் கொள்கை ''இடது சாரிகளுக்குப்'' பாதகமானது.

எனவே கைத்தொழிற் கொள்கைக்குப் பதிலாக விவ சாயக் கொள்கையை டி.எஸ். வகுத்தார். இது வெள்ளை எஜமானியரின் நலன்களுக்குச் சாதகமானது, அவர்கள் கைதட்டி வரவேற்றனர். விவசாயக் கொள்கையின் பெயராலான குடியேற்றம் தமிழ்த் தேசிய இனத் தன் மையைச் சீர்குலைக்க வல்லது. எனவே எல்லா வகையிலும் இது டி. எஸ்,இற்கு சிறந்த தோர் மூலோபாயமாய் அமைந்தது.

இதனல் கைத்தொழிலாக் கத்திற்கு மாறுன அத்தி வாரம் இலங்கையில் இடப் பட்டது. வெள்ளையரும் டி. எஸ். சேனநாயக்காவும் இணைந்து இவை அனைத்தை யும் உறுதிப்படுத்திக்கொண்ட நிலையில் ஒரு தந்திரமான ''சுதந்திரம்'' இலங்கைக்கு அளிக்கப்பட்டது.

பிற்காலத்தில் ''இடதுசாரி கள்'' ஐ. தே. க வாலும், சு. க யாலும் இரு வேறு தந்திரோபாயங்களிற் கூடா கத் தோற்கடிககப்பட்டுவிட்ட னர். ஐ. தே. க. ''இடது சாரிகளின்'' முதுகெலும்பை உடைத்தது. சு. க. ''இடது சாரிகளை'' உயிருடன் விழுங் கியது. தந்தையும், தாயும் விழுங்கி எஞ்சி இருந்ததை இன்று மகள் விழுங்குகிறர். 1970ம் ஆண்டின் தொடக்கத் தில் என். எம். பெரேராக் களும். விக்கிரமசிங்காக்களும் கூறினர்கள். தாங்கள் சு. க வை ஓர் ''இடதுசாரி'' சோசலிஸக் கட்சியாக மாற் றப்போகிறேம் என்று. இறுதி யில் மாற்றப் போனவர்கள் தான் மாறிப் போனர்கள்.

''இடதுசாரிகள்'' இலங்கை அரசியலில் ஒரு சக்தியல்ல என்ற நிலை 1977 பொதுத் தேர்தலில் முற்றிலும் ஊர் ஜிதமான பின்பு ஜே. ஆர். தலைமையில் கைத்தொழில் மயமாக்கற் கொள்கைக்கு ஐ. தே. க. போனது ஆனல் இது காலம் தப்பிய பயிர். விளைய முடியாது.

இதற்கான அரசியல் இராஜ தந்திரத்தினை அப்பட்டமாக வும், இரத்தமும் தசையு மாகவும் விளக்க முற்படுவது தான் இக் கட்டுரைத் தொட ராகும்.

அடுத்த வாரம் தொடர இருப்பது ''தந்திரமான சுதந்தரம்''.

# சிங்களத்தில்தமிழின் சின்னமாகவிளங்கும் தெருக்கூத்து

## பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திர

தமிழ் நாட்டுக் கூத்தின் மரபில் உள்ள பல்வேறு வடி வங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து சிங்களத்தில் பல உயர்ந்த நாடகங்களை எழுதித் தயா ரித்து, வெற்றியடைந்துள் ளேன்.

இந்தவகையில் அமோக வரவேற்பைப் பெற்ற 'மனமே' என்ற நாடகமும் அடங்கும். இந்த நாடகம் பார்வையாளர்களின் இத யத்தையே தொட்டது.

தமிழ் நாட்டுக் கூத்தில் உள்ள இனிமையான பாடல் களை பரிச்சயம் பெற்று, இருந்த சிங்கள நாடகப் பிரி யர்கள் 'மனமே' என்ற நாட கத்தின் இசையை விரும்பிப் படித்தனர்.

தமிழ் நாடகங்களின் இசை வடிவங்கள் நீண்ட வரலாறு கொண்டதுதான். இத்தகைய இசையின் உயர்வுககு கார ணமோ தெரியவில்லை,

சடங்குமுறையில் அமைந்த கிராமிய நாடக அரங்கு உண்மையிலேயே ரசிப்பதற் கும் சுவைப்பதற்கும் முழுமைபெற்ற நாடகமலல, இத்தகைய நாடக வடிவம் சிங்களத்தில் உருவாவதற்கு தமிழ் மரபில வளர்ச்சிபெற்ற தெருக்கூத்து உந்தலாக அமைந்துள்ளது.

தமிழில் இருந்து தெருக் கூத்து அல்லது வீதி நாடகம் தென்பகுதியில் உள்ள சிங் களக் கிராமங்களுக்கு ஒரு சுற்றுவழியின் மூலமே வந்து புகுந்தது முதலில் யாழ்ப் பாணத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதற்கு கையாளப்பட்ட வடிவமாகும். இக் கூத்தை 'கர்நாடகம்' என்று அழைப்பதுண்டு.

நாட்டுக்கூத்து இன்று பரவ லாக ஜனரஞ்சிகமாக கலை வடிவமாக உள்ளது. யாழ்ப் பாணத்திலும் கிழக்கு மாகா ணத்திலும் நடித்து காண் பிக்கப்பட்டு வருகின்றது.

கூத்தில் வடமோடி, தென் மோடி என இரு வகைகள் உண்டு. இதில் வடிமோடி சிங்களவரால் பின்பற்றப்படு கிறது.

சிங்கள கிராமிய கலாச் சாரத்தை ஆராயும்பொழுது சில இடங்களில் பத்தினி, ஐயஞர் ஆகிய இந்துத் தெய் வத்தின் வழிபாட்டினை ஆதார மாகக்கொண்டு ''கடுமடுவ'', ''புனுமடுவ'', போன்ற வழி பாட்டுத் தொடர்புடையவை; இவை சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டவை.

'கொக்கரி' என்னும் கூத்து வயலில் சூடு மிதிக்கும் களத் தில் ஆடப்படுவது. இந்து சமயத்தை ஆதாரமாகக் கொண்டது.

தேரவாத பௌத்த மதம் இந்துமதத்திலிருந்து பல அம் சங்களை உள்வாங்கியும் ஜீர ணித்தும் கொண்ட உன்னத ஆளுமை ஆகும்.

சிங்கள மக்கள் மத்தியில் இந்துக் கடவுளர்களை பக்தி செலுத்தும் முறைகள் தமி ழர் மரபு ஊடாகவே புகுந்து கொண்டன. விஷ்ணு, ஸ்கந்தகுமாரன் (கதிர்காமக் கந்தன்) சரஸ்வதி, பிள்ளை யார் வணங்கும் முறைகள் பௌத்தத்தில உள்ளன.

சரஸ்வதி கல்விக்குரிய தெய் வம். கணேசர் வியாபாரத் துக்குரிய தெய்வம் வெற்றிக் குரிய தெய்வமாக பௌத்தர் கள் வழிபடுகிறர்கள். அத் தோடு காணிகளை செலுத்தி பாதுகா அனுக்கிரகமும் வேண்டுகிறர்கள்'' என்றர்.

# ரியூனியா தீவுகளில் தமிழ்பேச முடியாத தமிழர்கள்

உலகில்தமிழர்கள் அன்று வேலைவாய்ப்புக்காகச் சென்று பல நாடுகளில் ஆங்காங்கே சிதறி வாழ்ந்தார்கள் இவர் கள் தமிழ் மொழி, தமிழர் கலாசாரம் ஆகியவற்றை கைவிட்டு அந்தந்த நாட்டு மொழியை பேசுபவராகவும், கலாசாரத்தைக் கடைப்பிடிப் பவராகவும் தமிழே பேசமுடி யாத தமிழர்களாகவும் வாழும் நிலை ஏற்பட்டுள் ளதை இன்று காணக்கூடிய தாக உள்ளது.

இந்தக் காலத்தில்கூட இப் படியான ஒரு நிலை புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடம் வேரூன்றிவிடுமோ என்று அஞ்சப்படுகின்றது. கனடா வில் பிறக்கும் தமிழ்ப் பிள்ளை கள், பிரான்சில் பிறக்கும் பிள்ளைகள், சுவிஸில் பிறக் கும் பிள்ளைகள் எதிர்காலத் தில் தாம் தமிழர்கள் எனச் சொல்வார்களோ என கவ லைப்படுகின்றனர்.

ரியூனியர் தீவுகளில் அன்று சென்று குடியேறிய தமிழர் களிடம் சமய மூடநம்பிக்கை யில் மூழ்கிக் கிடக்கிறர்கள். அங்கு வாழும் முதியவர்க ளுக்கு ஆண்டுக்கு 70 மணி நேரம் என்ற அடிப்படையில் தமிழ்மொழி பயிற்றப்பட்டு வருகின்றது. பிரெஞ்சுமொழி மட்டும் பேசும் தமிழ்க் குழந் தைகளுக்கு தமிழை கற்பிப் பதற்கு முயற்சிகள் நடை பெற்று வருகின்றன.

தென் அபிரிக்காவில் தமி ழர்கள் தமிழ்மொழிக்கு அர சியல் அந்தஸ்துப் பெறுவ தற்கு தென் ஆபிரிக்க தமிழர் பண்பாட்டுக் கழகத்தினர் முயற்சிசெய்து வருகின்றனர். இதன் பிரகாரம் தென்ஆபிரிக் காவில் அரசியலில் 5ம்இடஅந் தஸ்துகிடைக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மலேசியாவில் தமிழர்கள் கொஞ்சம் வசதி வாய்ப்புக்க ளோடு இருந்தபோதிலும் குழந்தைகளின் இறப்புப் பதி யும்போது அவர்களின் சம யம் தமிழியம் என்ற பொரு ளுக்கு தமிழிசும் என்று பதிந்து வருகின்றர்கள். ஈழப் போராட்ட நிலைமைகளால் மலேசியாவில் தமிழர்கள் பெரும் மதிப்புக்குள்ளாகி வருகின்றர்கள் என்று அங்கு வாழும் அறிஞர் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

ஆர். எஸ்

★ 1958 முதல் மக்கள் மனதைக் கவர்ந்த
ஈழநாடு வாரமலராகவும்
பூத்துக்குலுங்கும் காட்சி
பெருமை தரும் நிகழ்வு
சகலவிதமான பாடசாலை நூல்கள்,
உபகரணங்கள், காகிதாதிகள் அனைத்துக்கும்
ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை
ஸ்ரீ சுப்பிரமணியம் அச்சகம்
235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்.




நிலக்கீறு மேற்குக் கிழக்காக நீண்டு சோகம் கப்பிக் கிடக்கின்றது. வேலிக் கதிகால்கள் போலப் பனைமரங்களின் வரிசை. அவைகூடத் தலைவிரித்தாடும் கலகலப்பின்றி ஆழ்ந்த மோனத்தில் விடிவுக்காகத் தவமியற்றுவதாகப் படுகின்றது. சிதைந்துபோன கட்டிடங்கள் பார்வைப் பிடிக்குள் சிக்குகின்றன.

எப்படியிருந்த பிரதேசம்?

சமுத்திர நீரைக் கீறிக்கொண்டு பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறையை நோக்கிச் செல்கின்ற நக்ரோம பயணக்கப்பலிலிருந்து பார்க்கும்போது விரிகின்ற நிலக்கீற்றின் சோகம் மனதைக் கனக்க வைக்கின்றது.

அந்தத் தரையில் எவ்வளவு ஆனந்தமாகத் திரிந்தோம்?

''அப்பா...''

மகளின் அழைப்பு அவனுக்குக் கேட்கவில்லை. அவன் பித்துப் பிடித்தவன்போல அந்தக் கரையையே பார்த்துக்கொண்டிருந்தான். பலாலி.... மயிலிட்டி....காங்கேசன்துறை... கரையில் இறங்கிப் பெருந்தெருவைக் கடந்து சற்றுத் தூரம் போனுல் அவன் வாழ்ந்த வீடு. அது இன்று இருக்குமா?

அந்த வீட்டினை அமைக்க அவர்கள் எவ்வளவு கடினமாக உழைக்க நேர்ந்தது?

''அப்பா...'' என்று அழைத்தபடி அவன் முழங்காலில் கரத்தைப் பதித்து வனிதா உறுக்கியபோதுதான் நினைவு அங்கிருந்து கப்பலுக்கு வந்தது. வீட்டு வளவு முற்றத்தில் காய்களுடன் கிளை தாங்காது நின்றிருக்கும் பலா மரத்தை அவன் பார்த்துக்கொண்டிருந்தான். உச்சாரக் கொப்பரலில் கனிந்துவிட்ட பழம் ஒன்றினைக் காகங்கள் கொத்திச் சுவைப்பது தெரிந்தது. பழச்சதையை விழுங்கிவிட்டு உதறிவிட்ட பலாக் கொட்டை அவன்மீது விழுந்தது. இறக்கு கயிற்றேடு மரத்தில் ஏற அவன் தயாரானபோது மகள் உலுக்கிவிட்டாள்

அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். கனவு கலைந்த நிலை.

''என்னம்மா?''

''நரோமா என்றுல் என்னப்பா?''

''நரோமா இல்லை. நக்ரோமாதான் இந்தக் கப்பலின் பெயர்.''

''சரி...நக்ரோமா என்றுல் என்ன?''

கப்பலின் மேல்தள இருக்கைகளில் பயணிகள் அமர்ந்திருக்கிறுர்கள். அவர்கள் எல்லாரது கண்களும் தென்பக்கத்தில் நீண்டு கிடக்கும் நிலக்கீறில் பதிந்திருக்கின்றன. மணியம் ஆசிரியரும் இதே கப்பலில் வருகிறுர். மயிலிட்டியில் அவருடைய வீடிருந்தது. அவனுவது தன் மனைவி மக்களோடு பாதுகாப்பாகத் தப்பி ஓடி மல்லாகத்தில் அகதியாக அடைக்கலம் புக முடிந்தது. ஆனுல் மணியம் ஆசிரியர் அனைத்தையும் இழந்து தனியனுக ஓடிவிட நேர்ந்துவிட்டது. அவர் இப்பொழுது என்ன நினைப்பார்? விழிகளில் வடிகின்ற கண்ணீரைத் துடைக்கின்ற உணர்வுமின்றி கரையை அப்படியே பார்த்துக்கொண்டிருக்கிறுர். சுடுபட்டு முற்றத்தில் சரிந்து கிடந்த மூத்தவன் , ஓடும்போது ஷெல்பட்டுச் சிதறிப்போய்த் துண்டங்களாகப் பனை வடலிக்குள் சிந்துண்ட அவர் மனைவி, மகள் ...

கொடுமை......பெருங் கொடுமை.

''அப்பா...நக்ரோமா என்றுல் என்ன?''

''பெருங்கொடுமை அம்மா...'' என்றுன் அவன் தன்னை அறியாமல்.

''என்னப்பா...'' என்று வனிதா சிரிக்கிருள்.

அவன் மௌனமானுன்.

இந்தச் சிங்கப்பூர் பயணிகள் கப்பலுக்குப் பெயர் நக்ரோமா. நக்ரோமா என்றுல் என்ன? வனிதா கேட்டதுக்குத் தான் சொன்ன பதிலை எண்ணி இராசையா தன்னையறியாமல் கவலையோடு சிரித்துக்கொண்டான்.

அவன் விழிகள் கரையில் பதிந்து பயணப்பட்டு வீட்டு முற்றத்தில் தரித்து நிற்கின்றன. மீண்டும் ஒரு பலாக் கொட்டையைக் காகம் உதறிவிட்டது. பலாப்பழத்தின் இனிய மணம் முற்றமெங்கும் பரவியது. வீட்டிற்குள் இருந்து அவன் மனைவி சரசு மகள் வனிதாவை தூக்கிக்கொண்டு வெளியில் வருகிருள்.

முற்றத்தில் இறங்கியதும் நிறைந்திருந்த மணத்தை நுகர்ந்த வனிதா, ''அப்ப பலாப்பழம் ..பலாப்பழம்...'' என்று ஆரவாரப்பட்டாள். மூன்று வயது. ஒரே பெண். அவள் சத்தத்தைக் கேட்டு அவன் தந்தையும் தாயும் வெளியில் வந்தனர்.

''என்னவாம் ... குஞ்சுக்குச் சரியான கெலி...'' என்று அப்பு சிரிக்கிறுர்.

இப்பொழுதும் அவனுக்கு அவரின் அந்தச்சிரிப்பு நினைவு வருகிறது.

அது தான் அவன் அவரிடம் கண்ட இறுதிச் சிரிப்பு.

அவன் சாறத்தைக் கொடுக்குக் கட்டாகஇறுக்கிக் கொண்டான். இறக்கு கயிற்றையும் மேசைக் கத்தியையும் எடுத்துக் கொண்டான். இடுப்பில் கத்தியைச் செருகி, தோளில் கயிற்றை வளையமாக இட்டுக் கொண்டு மரத்தில் ஏறத் தயாரானுன்.

''கவனமடா, தம்பி...'' என்றுள் அம்மா. அவன் தாயைத் திரும்பிப் பார்த்து விட்டு பழகிய அந்தப் பலாமரத்தில் பக்குவமாக ஏறிக் கொந்திய பழத்தை நெருங்கியபோது காகங்கள் கூக்குரலிட்டன. 'சாப்பிட விடன்ரா... விடன்ரா...'

பலாப்பழத்தில் வண்டிக் கட்டாகப் பிணைத்து கயிறைப் பக்கத்துக் கிளையில் மாட்டிக் கீழே விட்டு, ''கவனமாகப் பிடித்துக்கொள் சரசு...இழுத்துப் பிடி வெட்டுறன்...'' என்றுன் சரசு இழுத்துப் பிடிக்க அவன் பழத்தின் காம்பைக் கத்தியால் அறுக்கத் தொடங்கியபோது ஷெல் ஒன்றுகூவியபடி பலாமரத்தின் உச்சியால் சென்றது. தூரத்தில் துப்பாக்கிச் சன்னங்கள் வெடிக்கும் சத்தமும் எழுந்தது.

அவ்விடத்தின் அமைதி குலைந்தது.

''கெதியா இறங்குங்கோ... கவனம்...இறங்குங்கோ...''

''பிடி வெட்டிப் போட்டு இறங்குகிறன்...''

''ஒண்டும்வேண்டாமப்பா. இறங்குங்கோ...''

அவன் மரத்திலிருந்து வேகமாக இறங்கினுன். நெஞ்சில் சிராய்ப்புக்காயம்.

பலாலியிலிருந்து இராணுவம் அந்தப் பக்கமாக வருகுதாம்.

இழப்பு...எல்லாவற்றையும் இழந்து அவர்கள் ஓட நேர்ந்தது.

''அப்பா...'' என்றுவனிதா மீண்டும் உலுப்பினுள்'' நக்ரோமா என்றுல் என்ன?''

''இழப்பு...பெரும் இழப்பு...'' என்றுன் அவன் சோகத்துடன்.

''அப்பாவுக்கு விசர்...''

கடல் நீரைக் கீறியபடி நக்ரோமா விரைகின்றது. இன்னும் சற்றுநேரத்தில் காங்கேசன் துறையை அடைந்துவிடும். அங்கு அவன்மண்ணில் அவர்கள் சோதனையிடப்படுவார்கள்.

அந்த மண்ணில் அவன் இந்த வகையில் கால் பதிக்கப் போகிறுன். மூன்றுண்டுகள்... நீண்ட காலம் .. அகதியாகக் கையேந்தி வாழ்கின்ற அவல வாழ்க்கை...

தூரத்தில் கரை தெரிகின்றது. அவன் தந்தையும் தாயும் குலாவி மகிழ்ந்த நிலம். அவர்கள் முன்னையர் ஆயிரமாண்டுகள் வாழ்ந்து கழித்த பூமி.

சிறுகதை

நெஞ்சு கனக்கின்றது எரிகின்றது.

''நீங்க எல்லாரும் ஓடிப்போங்கோ. நாங்க இங்க இருக்கின்றம். கிழடுகள்... ஒண்டும் செய்யமாட்டாங்கள். எங்களால ஓடிவரவும் முடியாது. வீட்டிற்குள்ள இருக்கிறம் ... போங்கோ...'' என்கிறுர் அப்பு.

''ஐயா சொல்கிறதைக் கேள் தம்பி... பெஞ்சாதி பிள்ளையோட மல்லாகப் பக்கம் போ...... பிரச்சினைமுடிஞ்சோடின திரும்பி வாங்கோ... கெதியாகப் போங்கோ ...'' என்கிறுள் அம்மா.

அவன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு வனிதாவைத் தூக்கிக்கொண்டு உடுத்த உடுப்புடன் தென்புறமாக ஓடியவர்களுடன் ஓடிப் போனுன்.

மூன்று நாட்களின் பின்னர் தகவல் வந்தது.

கிழடுகளும் சுடப்பட்டனர்.

இராசையாவின் விழிகள் கலங்குகின்றன. அவனைப் போல எத்தனை ஆயிரம்பேர்? இந்த மனிதர்களுக்கு என்ன பிடித்துவிட்டது?

நக்ரோமா துறைமுகத்தினுள் நுழைகின்றது. நுழைவாசலில் பெரியதொரு கப்பல் கடலிற்குள்சரிந்து கிடப்பது தெரிகின்றது. பதிலடி.

கப்பலைத் தளத்திற்கு அருகில் அணைத்துப் பிணைக்கிறுர்கள். அந்நியர்கள் துப்பாக்கிகளுடன் கரையில் நிற்கிறுர்கள்.

''எல்லாரும் வரிசையாகக் கீழை இறங்குங்கோ...''

அவன் எழுந்தான். வனிதாவைக் கரத்தில் பற்றினுன்.

''அப்பா சிலிப்பர் போடுங்கோ...''

''வேண்டாம் ... பொண்ணு...''

அவன் மகளுடன் கீழே இறங்கும்போது அவன் பின்னுல் ஐ. சி. ஆர். சி. வெள்ளைக்காரனும் வந்தான். கப்பலைவிட்டு தரையில் கால் பதித்ததும் அவன் சற்று நேரம் அப்படியே தரித்து நின்றுன். இனந் தெரியாத சுகம். அப்படியே குனிந்து வலக்கரத்தில் தரைப்புழுதி மண்ணை வாஞ்சையுடன் அள்ளிக்கொண்டு நிமிர்ந்தபோது அந்த வெள்ளைக்காரன்அவனை வியப்புடன் பார்ப்பது தெரிந்தது.

அவன் தோளில் பரிவுடன் கரத்தைப் பதித்து, அவன் உணர்வைப் புரிந்துகொண்டதைப் புலப்படுத்தியபடி அந்த வெள்ளைக்காரன் நகர்ந்தபோது, வனிதா அதே கேள்வியைக் கேட்டாள்:

''அப்பா... அந்தா எழுதியிருக்கு...நக்ரோமா என்றுல் என்னப்பா?''

அவன் எதுவும் பேசாதிருக்க...

''யுர் டோட்டர் ஆஸ்க் சம்திங் எபவுட் நக்ரோமா? வட் இஸ் இற்...'' 'உமது மகள் நக்ரோமா பற்றி ஏதோ கேட்டாள். என்ன?' என்று அந்த வெள்ளைக்காரன் தரித்து நின்று கேட்டான்.

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''சீ வோன்ஸ்த மீனிங் ஒப் நக்ரோமா...''

''ஓ...நக்ரோமா ... மீன்ஸ் லிபர்ட்டி.... லிபர்ட்டி...''

''நக்ரோமா என்றுல் என்னப்பா?''

''அது எங்களுக்கு கிடைக்க வேண்டிய ஒன்றம்மா... லிபர்ட்டி...சுதந்திரம்!''

அவன் கரத்திலிருந்த மண், பலாப்பழச் சுளையாக மணக்கிறது.

## அவரது மதிப்பீடு...!

'இந்தியா ருடே' சஞ்சிகைக்கு சந்திரிகா கொடுத்த பேட்டியில் இருந்து,



கேள்வி: உங்களுக்கு முன் ஜனுதிபதியாக இருந்த பிரேமதாச, ஜயவர்த்தன இருவரைப் பற்றிய உங்கள் மதிப்பீடு யாது?

பதில்: பேரழிவுகள். இருவருமே ஸ்ரீலங்காவிற்கு பேரழிவுகளாவர்.

கேள்வி: இருவரில் யார் மோசமானவர்?

பதில்: நிச்சயமாக ஜயவர்த்தனுதான். ஏனென்றுல் அவர் படுமோசமான எல்லாவற்றையுமே ஆரம்பித்தார். பிரேமதாச அவற்றைதொடர மாத்திரமே செய்தார். அவர் கெட்டதை செய்வதில் கெட்டித்தனமானவராக இருந்ததால் அவர் கூடிய ஆபத்தானவராவார்.

கேள்வி: அவர் ராஜீவ்மீது சவாரிவிட்டாரா?

பதில்: அவர் அரசியல்வாதிகளிலேயே தூய்மையற்றவர். ஆனுல் சூட்சமபுத்தியுடையவர். ரோஜன் குதிரை மாதிரி எதிராளிகளிடம் நண்பராகப் பதுங்கக்கூடியவர். மஃகிய வலிக்கே புத்தகம் எப்படி எழுதவேண்டுமென்பதைக் கற்றுக் கொடுத்திருக்கக்கூடியவர்.

கேள்வி: ஆகவே அவர் ராஜிவை முட்டாள் ஆக்கியவர் என்று நம்புகிறீர்களா?

பதில்: உண்மையிலேயே ஜெயவர்த்தனஇந்தியா தன்னைத் தானே தூக்கிலிடுவதற்கு நீண்ட கயிற்றை கொடுத்திருந்தார். ஜெயவர்த்தன இந்தியாவையும் விடுதலைப் புலிகளையும் ஒருவருக்கு எதிராக மற்றவரைத் தூண்டிவிட்டு தான் பிரச்னையில் விலகிஇருந்து ரசித்தார். ராஜீவ் இதற்குத்தான் உயிரையேவிலையாகக் கொடுக்க வேண்டியதாயிற்று.

கேள்வி: விடுதலைப் புலிகளுக்கு எதிராக கசப்புணர்வுஉடையவராக உள்ளீர்களா?

பதில்: இல்லை (ஆனுல் விடுதலைப் புலிகளுடனுன எதிர்ப்புணர்வை பொறுப்பற்றமுறையில் அகங்காரத் தன்மையுடன் வார்த்தைகளில் பிரயோகித்தார்)

மூன்று சகாப்தமாக வரலாறு கண்ட
ஈழநாடு "வாரமலர்"
மீண்டும் மலர்வது இதயத்தைத் தொடும் நிகழ்வு——★
ஃ பட்டுக்குடை ஃ ஆலவட்டம் ஃ கொடி ஃ வாமெல்
★ அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள ★
ஞானம் ஆடையகம்
34, சோதியாதெரு, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# ★ சுதந்திரத்திற்காக தீக்குளிக்கும் செச்னியா

ஆப்கானிஸ்தானில் கால் வைத்து அவமானத்துடன் அங்கிருந்து வெளியேறிய ரஷ்யா, தற்போது செச்னியாவுககுள் துருப்புக்களை அனுப்பி தன் குறிக்கோளை நிறைவேற்ற முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

சோவியத் துருப்புக்கள் ஆப்கானுக்குள் நுழைந்ததும் ஆப்கான் கெரில்லாக்களுக்கு, ரஷ்யாவை எதிர்த்து போரிட பல நவீன ரக ஆயுதங்களை வாரி வழங்கியது அமெரிக்கா. அப்போது சோவியத் ஒன்றியமும் ஐக்கிய அமெரிக்காவும் பனிப்போரில் ஈடுபட்டிருந்த காலம்.

தற்போது சோவியத் ஒன்றியம் பிரிந்து வேறு வேறு குடியரசு அமைப்புகளாக இயங்குகின்றன.

அந்தவகையில் தானுகப் பிரிந்து செல்வதாக 1991ம் ஆண்டு செச்னியா சுதந்திர பிரகடனம் செய்தது. அதனை ரஷ்ய குடியரசு ஏற்றுக் கொள்ளவில்லை. செச்னியாவின் பிரகடனத்தை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.

சோவியத் ஒன்றியம் பிளவுற்று, பனிப்போரும் ஒருவாறு அகல்வுற்று, உலகப் போர் மூளும் அபாயம் ஓரளவு நீங்கிய நிலையில் ஆப்கான் கெரில்லாக்களுக்கு உதவியது போல் செச்னிய போராளிகளுக்கு அமெரிக்கா உதவவில்லை.

## உலக வலம்

இந்த நிலையில் ரஷ்ய துருப்புக்கள், செச்னிய சுதந்திர போராட்டத்தை நசுக்குவதற்காக, மூன்ருண்டுகளின் பின் 1994ம் ஆண்டு டிசம்பர் மாதம் செச்னியாவுக்குள் நுழைந்தது. போர் வெடித்தது.

செச்னிய நிலைகள் மீது ரஷ்ய போர் விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. பல ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்தனர். பலர் அகதிகள் ஆகினர்.

செச்னிய போராளிகள் இறுதி வரை போராட திடசங்கற்பம் பூண்டனர். ஆரம்பத்தில் ரஷ்ய துருப்புக்களுடன மோதிப் போரில் இறங்கிய போராளிகள் பின்னர் கெரில்லா தாக்குதல்களையும் கையாண்டனர். ரஷ்ய துருப்புக்கள் திணறடிக்கப்பட்டன. பல ஆயிரம் ரஷ்ய படையினர் பலியாகினர். போர தளபாடங்களை ரஷ்யா இழந்தது. எனினும் செச்னியாவின் சுதந்திர போராட்டத்தை நசுக்க மேலதிக ரஷ்ய துருப்புக்கள் வரவழைக்கப்பட்டு சண்டை தொடர்கிறது.

குறுகிய காலத்தின் சண்டையை முடித்துவிடலாம் என எண்ணிய ரஷ்யா முன் வைத்த காலை பின்வைக்காமல், தன் கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ளவும் போராட்டத்தை நசுக்கவும் கங்கணம் கட்டி நிற்கிறது,

ஆனுல் செச்னிய போராளிகள் தங்கள் லட்சியம் நிறைவேறும் வரை போராடுவோம் என பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இந்த காலகட்டத்தில் செச்னியாவில் ரஷ்ய துருப்புக்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக குற்றம்சாட்டப்படுகிறது.

ரஷ்ய சம்மேளத்தின் ஒரு அங்கமாக இருந்துவந்த செச்னியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, உலகில் தோன்றிய பல்வேறு நெருச்கடிகளில் ஒன்ருகக் கருதப்படுகிறது,

செச்னியா 4 லட்சம் மக்களை சொண்டது. குரோஸ்னி இதன் தலைநகராகும். செச்னியாவின் தலைவர் டோகார் டுடேயேவ், தன் போராளிகளுக்கு தலைமை தாங்குகிறர். இவரை கைதுசெய்ய ரஷ்யத் துருப்புக்கள் முயன்றும் முடியாமற் போயிற்று.

ரஷ்ய இராணுவ தளபதிகளும் செச்னிய போராளிகளும இடையிடையே போர் நிறுத்தம செய்த போதும் அவை நீடித்து நிலைக்கவில்லை

செச்னியருடைய போராட்டம் இன்று நேற்று தொடங்கவில்லை. 1877-ல் இருந்தே தங்களது தனித்துவத்துக்காக போராடி' திர்ப்பை காட்டி வருகின்றனர் 1920 களிலும் 1926 களிலும் இன்னும் 1940 களிலும் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய வரலாறு பதியப்பட்டுள்ளது.

செச்னியர், ரஷ்யர்களால் புறக்கணிக்கப்பட்டு தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதுல் பிரிந்து போகும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டதாக கூறப்படுகிறது:

### 'கவிதாஸ்'

ஆப்கானஸ்தானில் 13 ஆயிரம் துருப்புக்களையும், பெருமளவு போர் விமானங்களையும் பல இராணுவ தளபாடங்களையும் இழந்த ரஷ்யா, செச்னியாவில் சொற்ப காலத்தில் போரை முடிவுக்கு கொண்டுவரலாம் என எண்ணி கால் வைத்தது. ஆனுல் முடியவில்லை.

இப்போராட்டம் காலம் காலமாக தொடரும். தமக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை அவர்களது துப்பாக்கிகள் தயை கக்கிக்கொண்டேயிருக்கும் என்கிறுர்கள் துணிச்சல் மிக்க அந்நாட்டு மக்கள்.

# வரலாறு அழைக்கின்றது

தேசத்தின் புதல்வர்களே! மண்ணின் புதிய சந்ததியே!

எங்களுடைய நாட்கள், வரலாற்றில் மிக முக்கியமான ஒரு காலகட்டம். தமிழரின் சரித்திரத்திலேயே அதி சிறப்பு வாய்ந்த ஒரு காலப்பகுதி இது. பழம் பெரும் பாரம்பரியப் பெருமைகள் நிறைந்த எங்கள் இனம். தனக்கென ஒரு அரசை நிறுவப் போர் செய்கின்ற ஒரு பொற்காலத்தில் பிறந்ததும், வாழக் கிடைத்ததும் எமது தலைமுறை பெற்ற ஒரு பெரும் பேறு ஏன்றுதான் சொல்ல வேண்டும்.

நாங்களே எம் தேசத்தின் பலம். நாங்களே எம் இனத்தின் மீட்சி. நாங்களே எம்மக்களின் சுபீட்சம். இதுதான் எமது தலைமுறையின் உன்னதம்.

சுதந்திரத்தை நாங்கள் வென்றெடுக்காது போனுல் அடிமைகளாய் அவமானப்பட்டு வாழவேண்டும். கையேந்தி நின்று, தலை குனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப் படிப்படியாக அழிந்து போகவேண்டும். ஆகவே சுதந்திரத்துக்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

சிங்களப் பேரினவாதப் பசாசு இறங்கி வந்து ஒரு போதுமே எமக்குத்தந்துவிடப் போவதில்லை என்பதைத்தான் வரலாறுஎங்களுக்கு கற்பித்து நிற்கின்றது. எனவே எது நடந்தாலும் யுத்தத்தில் வெல்லும் வரையும் நாங்கள் போராடுவோம். இரத்தச் சகதியின் மீதெனிலும் நாம் தமிழீழத் தனியரசையே பிரகடனப்படுத்துவோம்.

''மற்றவர்கள் போராடுவார்கள், அடுத்தவர்கள் சண்டை பிடிப்பார்கள்'' என்று எமது கூட்டுப்பொறுப்பில் இருந்து இன்று எல்லோரும் விலகிவிடுவேமேயானுல்கடைசியில் எவருமே போராடப்போவதில்லை.

எனவே எமது தேசத்தின் படை வலுவுக்கு மேலும் பலம் சேர்க்க ஒவ்வொருவருமே போருக்குப் புறப்படுவோம். இந்த யுத்தம் தாயக தேசத்திற்குப் பணி செய்ய நாம் பெற்றுள்ள ஒரு மகோன்னதமான பாக்கியம்.

தமிழீழம் வெறும் கனவல்ல!

புயல் கிளம்பும்! நிலம் நடுங்கும்! கடல் பொங்கும்! வானம் முழங்கும்! வாயு சுழன்றடிக்கும்! பூமிபிளக்கும்?

பிரபாகரனின் படை வீரர்களாய் அணி வகுத்து நகரும்போது, அட்டதிக்கும் அதிரும்! தமிழனின் சுதந்திர வேட்கையின் சுவாலைக்குள் சிங்களம் கருகும். இலங்காதேசம் இரண்டாகும்! சர்வதேசமும் வழி விடும்! தமிழர் தேசம் தனியரசாகும்!

'தமிழீழம்' கனவல்ல, நாளைய நம்நாடு.

இந்த நேரத்தில் இனத்துக்காகவும், நாட்டுக்காகவும் எங்களால் ஆற்றக்கூடிய ஆகக் கூடுதலான தேசப் பணியை வழங்குமாறு வரலாறு எங்களை அழைக்கின்றது.

நன்றி: விடுதலைப் புலிகள்''

# பரிணுமக் கொள்கை என்பது என்ன?

நெடுங்காலமாக தமக்கு இருந்துவந்த நம்பிக்கைஎன்னவென்ருல் இந்த நிலவுலகில் காணப்படும் ஒவ்வொரு ஜந்துவும்அதன தன்உருவில்தனித் தனியாகத் தோன்றியவை. அவற்றின் உருவத்தில் எந்த வொருமாறுபாடும் தோன்றவில்லை என்பதாகும்.இந்த நம்பிக்கை தவறுனது என்று வாதிட்டு ஒரு புதிய கொள்கையைக் கடைப்பிடித்துக் கூறினுர் சார்ல்ஸ் டார்வின் என்ற இயற்கை விஞ்ஞானி இந்தப் புதிய கொள்கைக்குப் பெயர் தான் பரிணுமக் கொள்கை (Theory of Evolution). அவர் கூற்று இதுதான்.

''இன்று காணப்படும் அனைத்து உயிரினங்களும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பொதுவானதொரு முன்னேரிடமிருந்து தோன்றிவையே. எல்லா மிருக இனங்களும் தாவரங்களும் முறையாக வளர்ச்சிபெற்று இன்று இன்றைய உருவை அடைந்துள்ளன. இந்த வளர்ச்சி இன்று மட்டுமல்லாமல் இனிமேலும் தொடர்ந்துகொண்டே செல்லும்'' என்பதே டார்வினின் பரிணுமக் கொள்கையின் சாரம்.

1809 ல் பிறந்து எடின்பரோ பல்கலைக்கழகத்தில் 5 ஆண்டுகள் நாடு நாடாகச் சுற்றி பல ஆராய்ச்சிகள் செய்த டார்வின் 1859ல் 'உயிரினங்களின் தோற்றம்' [Origin of species] என்ற புகழ் பெற்ற நூலை வெளியிட்டார். உயிரின வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகையில்; மனிதனும் மற்றும் பிறபிராணிகளும்ஒரே முன்னேரின் சந்ததி என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த முன்னேர் ஒரே உயிர்மம்கொண்ட அமீபா என்ற பிராணி! சிறுகச் சிறுக சுற்றுப்புறச் சூழலுக்கேற்ப உயிரினங்கள் உடற்பாங்கில் மாறுபாடுகள் நிகழ்ந்து நிகழ்ந்து எல்லாப் பிராணிகளும் இன்று காணப்படும் உருவத்தை அடைந்துள்ளன. 1882 ம் ஆண்டு மறைந்த டார்விலுக்கு நான்கு பிள்ளைகள் இந்த நால்வருமே புகழ்பெற்ற விஞ்ஞானிகள்!

# நாணயங்களின் பெறுமதி

(கடந்த வார நிலை)

| | | |
|---|---|---|
| 1 | அமெரிக்க டொலர் | 49 ரூபா 24 சதம் |
| 1 | ஸ்டேலிங் பவுண் | 78 ரூபா |
| 1 | ஜெர்மன் மார்க்ஸ் | 35 ரூபா 48 சதம் |
| 1 | பிரஞ்சு பிராங் | 10 ரூபா 08 சதம் |
| 1 | ஜப்பானிய ஜென் | 5 ரூபா 86 சதம் |
| 1 | இந்திய ரூபா | 1 ரூபா 58 சதம் |

ஈழநாடு வார மலர் புதிய பொலிவுடன் மிளிர்வது
ஈழத் தமிழர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி....
சகலவிதமான ஆங்கில மருந்து வகைகளுக்கு
குறிஞ்சி மெடிக்கல்ஸ்
பரமேஸ்வராச் சந்தி. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

வளர்ச்சி காணும் "ஈழநாடு" மற்றுமொரு முயற்சியாக
"வாரமலர்" மணம் வீச மீண்டும் மலர்கிறது
எமது நல்வாழ்த்துக்கள்
அழகுசாதன அலங்காரப் பொருட்களின் சுரங்கம்
★ நிலையான மொத்த சில்லறை வியாபாரிகள் ★
ஜெயா அழகு மாடம்
மொத்த விற்பனை :
187. இராசன் வீதி,
( மின்சாரநிலைய வீதி ),
யாழ்ப்பாணம்.
சில்லறை வியாபார நிலையம் :
177 A. இராசன் வீதி,
( மின்சாரநிலைய வீதி ),
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்
நல்லூர் பொது நூலகம்.

# தமிழீழத்திற்கு பொருத்தமான மாற்று சக்திவளம்

## சூரிய மின்கலங்கள்

சக்தியை வழங்கும் மரபு ரீதியான வளங்கள் அதிவிரைவாக அழிவடைந்து செல்லும் தன்மை கொண்டவை. ஆதிகாலம் முதல் இன்று வரை உலகத்திலே பரவலாகத் தாவரங்களே பெருமளவுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இடைக்காலக் கண்டுபிடிப்பான நிலக்கரி, பெற்றோலியம் என்பன கைத்தொழில் புரட்சியை ஏற்படுத்தியது மட்டுமன்றி நவீன உலகின் எரிபொருட் தேவையின் பெரும்பங்கை வழங்கின, அதிக பயன்பாட்டின் காரணமாக இவை படிப்படியாக அழிவடைந்து சென்று இன்னமும் 50 — 75 வருடங்களில் முற்றாக அற்றுப்போய்விடும் நிலைகாணப்படுவதாக ஆய்வாளர் கருதுகின்றனர்.

எதிர்கால உலகின் சக்தி வளத்தேவைகள் அழிவடையாத அல்லது குறைவுபடாத சக்திவளங்களான சூரியசக்தி, காற்றுச் சக்தி, உயிரியல் வாயுச்சக்தி, வற்றுப் பெருக்குச் சக்தி, அலைச்சக்தி, அணுசக்தி போன்ற சக்தி வளங்களின் மூலமாகவே பெறப்பட முடியுமென விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இவற்றையே மாற்றுச் சக்தி வளமென வழங்குகின்றனர்.

எமது தமிழீழத்தில் மாற்றுச்சக்தி வளங்களைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகள் நிறைய உண்டு. எமது பிரதேசத்தில் வருடத்திற்குச் சராசரியாக 55 — 60 நாட்களே மழைநாட்கள். எனவே சூரிய சக்தியைப் பயன்படுத்தும் வாய்ப்பு இங்கு அதிகம். சோளகக்காற்றும், வாடைக் காற்றும் வருடத்தின் நீண்டகாலம் காற்றுச சக்தியைப் பயன் படுத்தக்கூடிய வாய்ப்பை அளிக்க வல்லன. அதிக கால் நடைவளம் இங்கு உள்ளதால் அதிலிருந்து உயிரியல் வாயுச்சக்தி பெறப்படலாம். வற்றுப்பெருக்குக் கொண்டதும் நுழைகழிப் பகுதிகளை பெருமளவு கொண்டதுமான நீண்டகடற்கரையோரப் பகுதிகளில் சில அணைத்தடுப்புகளை அமைப்பதன் மூலம் வற்றல் பெருக்கு நிலையை சக்தி பெறுவதற்கும் பயன் படுத்த முடியும் கடல் நீரோட்டமுள்ள பகுதி வளம் கண்டறிந்து அலைச்சக்தியையும் சக்தி வளமாகப் பயன்படுத்தக்கூடிய சாத்தியம் உண்டு. இவை தவிர கிழக்குக் கரையோரப் பிரதேசங்களில் பரந்து காணப்படும் இல்மனைற, மொனசைட் படிவுகளைப் பயன்படுத்தி அணு சக்தியை உருவாக்க முடியுமென விஞ்ஞானிகள் உறுதிப்படுத்துகின்றனர். இவ்வகையான மாற்றுச் சக்தி வளங்களிலே சூரியசக்தியை எமக்குப் பொருத்தமான வழிமுறையில் எவ்வகையில் பயன்படுத்தலாமென பார்ப்போம்.

சூரியனே சக்தியின் ஆதாரம் சூரிய ஒளியில் இருந்து சக்தியைப்பெறுவதற்கு இன்று புத்தம் புதிய தொழில் நுட்பங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன, 20 ஆம் நூற்றூண்டில் சூரிய சக்தியை உலகம் பெருமளவு பயன்படுத்துமென விஞ்ஞானிகள் கூறுகின்றூர்கள். மரபுரீதியான சக்திவளப்பயன் பாட்டால் ஏற்படும் சூழல் மாசுபடும் பிரச்சனை இவ்வளப் பயன்பாட்டால் இல்லாதொழிந்து விடும்.

சிலபொருட்களின்மீது சூரிய ஒளி படும்போது ஒருவகை மின்னேட்டம் உண்டாகின்றதென பிரஞ்சு விஞ்ஞானி எட்மண்ட் பெக்கால் என்பவர் 1839 இல் கண்டுபிடித்தார். இக்கண்டுபிடிப்பைத் தொடர்ந்து 'செலினியம்' என்ற கனிமத்திலிருந்து திருத்தமற்ற சூரிய மின்கலங்கள் தயாரிக்கப்பட்டன. இவ் ஆய்வுப்பணி மேலும் தொடர்ந்து 1954 இல் நியூஜெர்சியிலுள்ள பெல் ஆய்வுக் கூடத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'சிலிக்கன்' எனும் கனிமத்தைப் பயன்படுத்தி சூரிய மின்கலம் தயாரிக்க முயன்று வெற்றி பெற்றனர். 1960 களில் சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையே விண்வெளிப் பயணம் தொடர்பாகபோட்டி நிலை சூரிய மின்கலத் தயாரிப்பை ஊக்கப்படுத்தியது. ஏனெனில் செயற்கைக் கோள்கள் இயங்குவதற்கு சூரிய மின்கலங்களே தேவைப்பட்டன.

இரா. சிவச்சந்திரன்
சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்

'சிலிக்கன்' என்பது உலகில் மிகவும் மலிவாகவும் அதிகமாகவும் கிடைக்கும் கனிமமாகும். இது புவியில மண்ணுடன் கலந்துள்ளது. இக் கனிமத்தை 1400 o c சென்றிகிரேட் அளவுக்கு வெப்பமேற்றுவதன் மூலம் படிகவார்ப்புகள் பெறப்படுகின்றன. இப் படிகங்களிலிருந்து தனித்தனிச் சில்லுகளாக சிலிக்கன் வெ எடுக்கப்பட்டு சூரிய மின்கலங்கள் தயாரிக்கப்படுகின்றன சூரியமின் கலங்களின் உற்பத்திச் செலவு இன்றும் அதிகமாகவே உள்ளது. ஆனல் எதிர்காலத்தில் குறைந்த விலையில இவற்றை உற்பத்தி செய்ய முடியுமென விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். 1973 இல் ஏற்பட்ட பெற்றோலிய நெருக்கடிக்குப் பின்னர் சூரிய மின் கலங்களின் உறபத்தியில் உலக நாடுகள் பெரிதும் அக்கறை கொண்டுள்ளன. 1990 ஆம் ஆண்டுகளில் அமெரிககா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சீன, இந்தியா போன்ற நாடுகள் சூரிய மின்கலங்களை உற்பத்தி செய்வதில் தீவிர அககறை காட்டி வருகின்றன. பல தனியார் கம்பனிகள் இவ் உற்பத்தியை சர்வதேச வர்த்தகமாக மாற்றியுள்ளன. இதனல் எதிர்காலத்தில் சூரிய மின்கலங்களின் விலை கணிசமாகக் குறையக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

மரபு ரீதியான சக்தியைப் பயன்படுத்தி மின்சார மயமாக்கபபட்ட கைத்தொழில் நாடுகளையும் நகரங்களையும் சார்ந்த மக்களை விட மூன்றும் உலகக் கிராமிய மக்களே சூரியமின்கலங்களால் அதிக பயனைப்பெற்றுக் கொள்ள முடியும். மூன்றும் உலகக் கிராமமொன்று சூரிய மின் கலங்கள் மூலம் பின்வரும் பயனகளைப் பெற்றுக்கொளளலாம்.

1. வீட்டுப் பாவனைக்கு மட்டுப்படுத்தப் பட்ட மின்சாரத்தைப் பெறல்.
2. சிறிய அளவிலான விவசாய நடவடிக்கைகளுக்கு நீரிறைத்தல்.
3. கிராமிய வைத்தியசாலைகளில் குளிரூட்டிகளை இயங்கச் செய்தல்.
4. கலங்கரை விளக்குகள், வீதி விளக்குகள் பொருத்துதல்.
5. கிராமத்திற்குத்தேவையான நீரைச் சுத்திகரித்தல்.
6. தொலைத் தொடர்புச் சாதனங்களை இயங்கச் செய்தல்.
7. வாகனங்கள் படகுகளுக்குரிய மின்கலங்களுக்கு மின் ஏற்றம் செய்தல்.

போன்ற நன்மைகளை கிராமிய அமைப்புகள் ஒன்றிணைந்து கிராம மக்களுக்குப் பெறறுக்கொடுக்கலாம்.

இன்று அநியாயமான முறையில் எமக்கு விதிக்கப்பட்டுள்ள எரிபொருள்த்தடையின் பாதிப்பிலிருந்து ஓரளவு விடுபடுவதறகு நாம் சூரிய மினகலங்களைப பாவிக்கமுடியும. வீட்டுபபாவனைக கேறற சூரிய மினகலங்கள் பல்வேறு அளவுகளில் யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களில் கிடைக்கின்றன. (இவை 20W முதல் 80W வரையான மின் சக்தியை வழங்கக் கூடியன) 15 வருடங்களுக்கு இச்சூரிய மின்கலங்களைப பாவிக்க முடியும் இவற்றில் ஒன்றைப்

(8-ம் பக்கம் பார்க்க)

# கவிமலர்

## சொல்லுமையா உலகிற்கு எம் பொடியள் வீரத்தை

[ஒரு புத்திஜீவியையும் ஒரு பாமரப் பெண்ணையும் ஆனந்தி அக்கா விமானம் வீழ்த்தியது பற்றி அபிப்பிராயம் கேட்டதாய் வைத்துக்கொண்டு எழுதப்பட்ட கவிதை இது]

ஆனந்தி அக்கா
ஆவலோடு கேட்டாவே
வீரவேங்கைகள் சுட்டு வீழ்த்திய
'அவ்ரோ'வைப் பற்றி என்னய்யா
சொல்லுறீர் அதிபரையா என்று
''ஐயோ நாமெல்லாம்
புததி ஜீவிகள் - கலவிமான்கள்
மெல்லமாய் பேசுவோம்
எமக்கேன் வம்பை?
எமக்கு வேணும் சமாதானம்
ஓமோம் சமாதானம்தான்
எப்பிடியும் சமாதானம்''
எப்பிடியும் சமாதானமா?
மானத்தை இழந்து
மரியாதையை இழந்து
கை கட்டிக் குனிந்து நின்று
'கமக் நாய்' என்று
தருவதை வாங்கினல்
போது மோய்யா உமக்கு?
சண்டை வேண்டாம், அதுசரி
யாருக்கையா வேணும் சண்டை?

புலிகள் வீழ்த்திய
'அவ்ரோவை'ப் பற்றி
பார்வதி ஆச்சி சத்தியமாய்
நீ என்னணை சொல்லுறய்?
''தம்பி பயமோ எனக்கில்லை,
பட்டமும் எனக்கில்லை
பதவி உயர்வும் எனக்கில்லை
இருந்தாலும் எனக்கு
உவை எல்லாம் தூசியடா
அண்டைக்கு அவர் வந்து...
'புக்காரு' வில் போட்ட குண்டால்
பொறுக்கினமே அழுதழுது
சின்னம்மாவின் சதையையும்
சித்தப்பாவின் எலும்பையும்
இண்டைக்கும் நிக்குதடா
கண்ணுக்கு முன்னலை
பள்ளயால வந்த பாலன்
பாவம் சிதறி 'ஹெலிகொப்டரி'ல் தட்டினது
இண்டைக்கு நாங்கள்
தேடிப் பொறுக்கினது
'விங கொமாண்டரின் சதையும்
கேணல் ஐயாவின் எலும்பும்
எப்பிடியடா வீரம், எங்கள்
புலிகளின் தீரம்-
உண்ணைத் தம்பி, மயிர்
கூச்செறியுதடா- விழுமடா
இன்னும் கொஞ்சம் பொறுத்துக்கொள்''

பார்வதி ஆச்சிக்கு
வந்த ரோசம் இந்த
புத்திஜீவிகளுக்கு இன்னும்
ஏன்தான் வரவில்லை?
தாங்கள் புத்தி ஜீவி(சீவி) களாம்
சமாதானம் மட்டும் வேணுமாம்!
சண்டைக்கு நாங்கள்
கொடுக்கா கட்டினேம்?
அடிக்கடிக்க வாங்கி இப்ப
தாங்காது தலைநிமிர்ந்து
ஏவுகணை தூக்கியுள்ளோம்
மானத்தை விட்டு
சமாதானம் தேடமாட்டோம்
நழுவல்புத்தி ஏனையா உமக்கு
அதிபரையா, நழுவாமல்
சொல்லுமையா உலகிற்கு
எம்பொடியள் வீரத்தை!

— மணியன்.

## ஏனே அவரின்னும் வரவில்லை

வானம் வரவர இருளுதே! வந்திடு வாரின்னும் காணல்லே
போனவர் மானம் வெளுக்குமுன் போன சயிக்கிலும் என்னவோ,
ஏனே அவரின்னும் வரவில்லை? என்ன நடந்ததென் பாரிலை
கொளுத்திய வெய்யிற் காட்டிலே, கொத்தி எடுத்த விறகினை
இழுதது வரும்போது கட்டைகள், இடறி விழுந்துமுள் தைத்ததோ
பூச்சிபுழுநிறை பொட்டல்கள், போகும் வழிபள்ளந் திட்டைகள்,
பேச்சிபோல் நானுந் தெருவிலே, பேரூர் தெரிந்தவர் தோணல்லே,
ஆச்சு தினியென்ன கொஞ்சமப் பாலும் நடந்தால் அறியலாம்!

கட்டை விறகு கனத்ததோ, கட்டிய பாசல்''கை விட்டதோ,
கொத்திய கோடரி பறிந்துகை. குறிதவறிக் கால்கை பிளந்ததோ,
எப்படி நானிங்கு வாழுவேன், ஏதிலி வாழ்வெப்போ தீருமோ,
அண்ணு! உங்கள் போல வந்தவோர், ஆளொன்று விறகொடு வருகுதோ?
என்னவோ நடந்து தான் போச்சுது இவ்வள வுக்கவர் சுணங்கிடார!
பெண்ணுகப் பிறந்தவள் கேட்கிறேன் பேசாது நிற்கிருய் பேயென்றே,
கண்ணுல் நீர்பொரப் பின்முகம் காட்டியவன் சைககிள் உழக்கினன்,
ஐயோ என்றுள், மரத்தின் கீழ்' அயர்ந்தவன் தோள்பற்றி] உயிர் பெய்தாள்.

— தில்லைச் சிவன்

# ஆரோக்கியத்துக்கும், உயிர் வாழ்வுக்கும் சவால்விடும் கிருமிநாசினிகள்

இன்று பயிர்களுக்கு பாவிசகப்படும் கிருமிநாசினிகள்மனிதவாழ்வுக்கும்அவனது ஆரோக்கியத்துக்கும் சவாலாக அமைந்துவிட்டன என்று ஆராய்ச்சியாளர்கள் பலர் கவலைகொணடுள்ளனர்.

கிருமிநாசினிகள் வாய்' சுவாசம், தோல் என்பவற்றுக் கூடாக மனித உடம்புக்குள் உள் நுழைந்து விடுகின்றன. விவசாயத்துக்கு அல்லது சுகாதார தேவைகளுக்குப் பாவிக்கப்படும் கிருமிநாசினிகளில் காற்று, உணவு, நீர் மாசடைவதால் நச்சுத்தன்மை அடைகின்றன.

இன்று விவசாயிகள் பலர் கிருமி நாசினிகள் ப்ரயோகிப்பதில் அளவுக்கு மிஞ்சி சில நேரங்களில் பாவிபபதால் பாவனையாளர்களுக்கு பெரும் துன்பத்தைவிளைவிக்கின்றனர்.

மூன்றும் உலகநாடுகளில் வருடந்தோறும் 5 மில்லியன் பேர் கிருமி நாசினிகளால் நஞ்சூட்டப் படுகிறார்கள் 20,000 பேர் சடுதியாக மரணத்தைத் தழுவுகிறார்கள் இதன்படி நாளொன்றுக்கு 68,000 பேர் அல்லது நிமிடத்துக்கு 43 பேர் நச்சுத் தாக்கத்திற்கு உள்ளாகிறார்கள்.

கிருமி நாசினிகளால் ஏற்படும் தாக்கத்தினை இரு பகுதிகளில் பிரிக்கலாம். 1. குறுங்காலத் தாக்கம் 2- நெடுங்காலத் தாக்கம் என்பனவாகும்.

நரம்பு. கண் என்பன பாதிக்கப்படல் மயக்கம், குமட்டல், களைப்பு ஆகியன குறுங்காலத்திற்குரிய பாதிப்புகளாகும்.

புற்றுநோய், பிறப்புசார்ந்த பாதிப்பு, சிறுநீரகம், ஈரல் என்பன நெடுங்கால தாக்கங்களாகும்

அமெரிக்க சுற்றுடல் நிறுவனம் புற்றுநோயை உண்டாக்கக் கூடிய 92 கிருமிநாசினிகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். மேலும் 1700 குருமிநாசினிகள் கடும் ஆரோக்கியப் பிரச்னைகளை ஏற்படுத்துகின்றது என்று அறியப்பட்டுள்ளது. உதாரணமாக சைலீன் போன்றன புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது டொறுவீன் போன்றவை கருவுருவுக்கு நச்சுத்தனமையை ஊட்டுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனம் மெதமிடபோஸ் என்னும் கிருமிநாசினியை அபாயகரமான கிருமிநாசினி என்று அறிவித்துள்ளது.

'ஈ டி டி. சி' எனப்படும் பங்கசுகொலலி காய்கனிகளுக்கு பயன்பயுத்தப்படுகிறது. இது வெப்பமூட்டும் போது எத்லீன் தியோரியா என்ற பொருளாக மாற்றமடைகிறது. இப்பொருள் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியது.

பழங்களைப் பதப்படுத்தும் டெல்பினில் என்ற பங்கசு கொல்லி சிறுநீரகதுதுக்கும் ஈரலுக்கும் சேதம் ஏற்படுத்துகின்றது.

கிருமி நாசினிகளால் 1988ல் மெக்சிக்காவில் 700 க்கு மேற்பட்டோர் இறந்ததாகவும் 13,000 பேர் நோய் வாய்ப்பட்டுள்ளனர். என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் வருடமொன்றுக்கு 27,000 முதல் 3 லட்சம் மக்கள் நச்சுத் தாக்கத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

நியுஸிலாந்து விவசாயிகளில் 8 வீதமானோர் ஆரோக்கியப் பிரச்சினைக்கு கிருமி நாசினி காரணமாய் அமைந்துள்ளது.

கிருமி நாசினியை விவசாயத்துக்காகப் பாவிப்பவர்கள் உரிய தற்காப்பு முறைகளோடு, அளவோடு கிருமி நாசினி பாவித்தால, இறப்பதில் இருந்தும், நோய் பீடிப்பிலிருந்தும தப்பிக கொள்ளலாம்.

தொகுப்பு: தாரணி

## தமிழீழத்திற்கு

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

பெற்று சூரிய ஒளிபடும்கூரை மீது வைத்து கார் பற்றறி (12 V) ஒன்றுடன் அதனை இணைத்து விடுவோமாயின், பகலில் பற்றறியில் மின்ஏறும். பற்றறியில் இருந்து பெறப்படும் மின்சாரத்தை எமது தேவைக்கேற்ப பகலிலும் இரவிலும் பயன்படுத்த முடியும். சறிய அளவிலான மின் குமிழ்களைப் பொருத்துவதன் மூலம் வீட்டிற்குத் தேவையான மின் ஒளியை நாம் பெற்றுக்கொள்ள முடியும். வானொலி, தொலைக்காட்சி, சிறிய மின்விசிறி, ஒடியோ, வீடியோ சாதனங்கள் என்பனவற்றையும் இயக்கமுடியும். மீள் மின்னேற்றம் பெறத்தக்க டோச் பற்றறி, பென்டோச் பற்றறிகளுக்கும் மின் ஏற்ற முடியும். சிறியளவிலான குளிர்சாதனப் பெட்டிகளையும் இயக்க வைக்க முடியும்.

சூரியமின்கலங்களின் பாவனை பற்றிய விழிப்புணர்வை எமது மக்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம் வீடும் ஒளி பெறும் நாடும் ஒளிபெறும். தமிழீழத்திலே பரந்துள்ள வெண்மணல் பரப்புகள் குறிப்பாக மணற்காட்டு மண் சூரிய மின்கலங்கள் தயாரிக்கக் கூடிய 'சிலிக்கா' கனிமத்தை பெருமளவு கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழீழம் மாற்றுச் சக்திக்குப் பயன் படுத்தக் கூடிய வளங்கள் மிக்க பூமியே

## ★ நாட்டின் வரலாறு

# கனடா

கனடாவில் ஆரம்ப கால குடிகளாக செவ்விந்தியரும், கினியட் என்ற இரு இனத்தவர்களே வாழ்ந்து வருகின்றார்கள். 17-ம் நூற்றுண்டில் கனடா பிரஞ்சின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. 18-ம் நூற்றுண்டில் இங்கிலாந்துக்கு கீழே இருந்ததல்லாமல் மன்னராட்சியின் கீழும் கனடா இருந்தது

கனடாவின் பிரதான தலைநகர்ஒட்டாவாவாகும் முக்கியமான கனடாவின் கலாசாரம் ஆங்கிலேயர்களையும் பிரஞ்சு நாட்டவரையும் பின்பற்றுவதாக இருக்கின்றது கனடாவின் ஆங்கிலம் எழுதுவது பிரஞ்சு எழுத்துக்கள் மூலமாகும். ரொறன்ரோ நகரும் வட அமெரிக்க கலாச்சாரத்தின் முக்கிய நகரமாகவும், மொன்றியல் நகரம் உலகத்தில் பிரஞ்சு மொழி பேசும் மககள் கூடுதலாக வாழும் நகரத்தில் இரண்டாவது நகரமாகும் அங்குள்ள தொலைக்காட்சிகள் பிரஞ்சு மொழியிலே ஒலிபரப்பும செய்கின்றன

கனடாவின் பொருளாதாரம். சுயதொழில் வாய்ப்பில் தான் கூடுதலாக பெறப்படுகின்றது. மீன்பிடி, விவசாயம் போன்றவைதான் பிரதான தொழில் வருமானங்களாகும்.

தொழில் நுட்ப நிலையங்கள் எலக்ரோனிக் பொருட்கள் உற்பத்தி, பொறியியல் தொழில் மூலம் கனடாவுக்கு வருமானங்கள் வரும் ஏனைய மூலகங்களாகும்.

கனடா தற்போது பொது நலவாய நாடுகளில் ஒன்றாகவே இருக்கிறது. இன்று கனடாவில் 25 7 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள் கனடா மக்களில் 44.6 மக்கள் ஆங்லேயராகும். 28 7 பிராஞ்சு இனத்தைக் கொண்டவர்கள். செவ்விந்தியரும். இனுட் இனத்தைச் சேர்ந்தவாகள் 2 வீதமே வாழ்கிறார்கள்.

கனடா மக்களில் ஐந்தில் நாலு பங்கினர் மொன்றியல், ரொறன்ரோ போன்ற நகரஙகளிலும், அடுத்த ஹலிபிக்ஸ், வன்கூவர் டோன்ற வியாபார நகரங்களிலும் செறிந்து வாழ்கிறார்கள் கியூபெக் கனடாவில் பழம் பெருமை வாய்ந்த நாடென்று சொல்லப்படுகின்றது.

விமானஙகள் தயாரித்து விற்பனை செய்வது மிகவும் கூடுதலான வருமானமாக இருக்கிறது. 'ரொல்' வர்க்கம் என்ற இந்த சிறு விமானத்துக்கு உலகெங்கும் நல்ல கிராக்கி இருந்து வருகின்றது.

- சரவணன்

# சர்வதேச அரங்கில்

★ குரேசியா இராணுவம் தாக்குதல் ஒன்றால் திரும்பிக் கைப்பற்றிககொண்ட மேற்கு சில்வேனியாப் பிரதேசத்தை சுற்றிவளைத்த இராணுவம் சுமார் 1000 சேர்பிய பெண்களையும். குழந்தைகளையும் ஆண்களிடமிருந்து வலுக்கடடாயமாக எங்கோ தெரியாத இடத்துக்கு அனுப்பி வைத்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

★ குர்திஷ் போராளிகள் ஊடுருவலைத் தடுப்பதற்கு ஈராக்கிற்கும், துருக்கிக்குமான எல்லைகளை மறுவரைவு செய்வதற்குத் துருக்கி ஜனாதிபதி சுலைமான் டி மிரல் அறிவித்திருக்கின்றார். துருக்கி வட ஈராக்கினுள் 35 000 துருப்புக்களை, குர்திஷ் ஆயுதப் போராட்டம் நடாத்தும் தொழிலாளர் கட்சியை வேட்டையாடும் முகமாக அனுபபி வைத்துள்ளது.

★ பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தலில் ஜெக்விஸ் சிராச் வெற்றி பெற்றுள்ளார். இவர் 1981-1988ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஜனாதிபதித தேர்தலில் தோல்வி கண்டவர்.

★ அங்கோலா கிளர்ச்சித் தலைவர் ஜொனஸ் சவிம்பியும், அங்கோலா ஜனாதிபதி ஜோஸ் எட்வட்டோ டெரஸ் சாண்டோசும சாம்பியாவின் தலைநகர் லுசாக்காவில் சந்தித்துள்ளார்கள். 1975ம் ஆண்டு போர்த்துக்கல்லிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்பு, இங்கு சிவில் யுத்தம் ஆரம்பமானது.

★ ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் இறங்கியுள்ளதால் அமெரிக்கா ஈரானுககு எதிராக வர்த்தகத் தடையை விதிததுளளது.

"ஈழநாடு" வாரமலரை
வளமுடன் வாழ்த்துகின்றோம்------★
எந்த நேரத்திலும் எந்த மாணவர்களும்
எந்த புத்தகங்களுக்கும்
— ★ மாணவர்கள் நாடவேண்டிய புத்தக ஸ்தாபனம் ★ —
பாலாஜி புத்தகசாலை
16, பஸ் நிலையம், ★ யாழ்ப்பாணம்.

அகிலமெங்கும் பரிணமிக்கும் "ஈழநாடு"வின் வாரமலர் வெளிவருவது எல்லோர் மனதிலும் களிப்பூட்டுகின்றது.
"எஸென்ஸ்" வகைகளின் நறுமணக் கடல்.
எல்லாவகை வெளிநாட்டு தயாரிப்புக்களும்
வேண்டியளவில் விற்பனை செய்யப்படுகின்றது.
சிவா நறுமணப் பூங்கா 288, கேணலிட்டுசாலை, (ஆஸ்பத்திரி வீதி)
SIVA ESSANCE & GROSCERIES யாழ்ப்பாணம்.
தலைமையகம் றேயல் இன்டஸ்றிஸ், ஆனைக்கோட்டை.



யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# இவ்வாரம் எப்படி?

### மேடம்

[அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் கால்]

அறிவாற்றல் கூடும், நற்காரியங்கள் நிகழும், உடல் நலம் பாதிக்கும். குடும்ப உறவு மகிழ்ச்சி தரும். நெருங்கிய நண்பர் உதவிகள் செய்வர், பணநிலை திருப்திகரமாக இருக்கும், தொழில்நிலை முன்னேற்றமுண்டு, நற்பலன் மிக்க வாரம்.

### இடபம்

[கார்த்திகை 2, 3, 4ம் கால், ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் கால்]

இனசன உதவியுண்டு, வெளியுலகத் தொடர்புகள் மேலோங்கும், நினைத்த காரியங்கள் கைகூடும், தொழிலில் புதிய முதலீடுண்டு, கடன்கள் வசூலாகும், குடும்பத்தில் அமைதி நிலவும், புத்திரர் மூலமான செலவுண்டு, சுமாரான வாரம்.

### மிதுனம்

[மிருகசீரிடம் 3ம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3ம் பாதம் முடிய]

தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிட்டாது, பணப்புழக்கம் குறைவாக இருக்கும், குடும்பத்தில் மந்தநிலை உண்டு, நண்பர் ஒருவரின் மனஸ்தாபத்துக்கு உள்ளாகலாம், வைத்தியச் செலவு உண்டு, அமைதி குறைந்து காணப்படும் வாரமாகும்.

### கடகம்

[புனர்பூசம் 4ம் பாதம் முதல் பூசம், ஆயிலியம் வரை]

தொழில் முடக்கமுண்டு, குடும்பத்தில் சலனங்களுண்டு, பழைய தொல்லைகள் குறித்து அலைச்சல் உண்டு, வீண் மனஸ்தாபங்களும், பண விரயமும் உண்டு, காரிய தாமதம் இருக்கும், உறவினர் குறைகளைக் கேட்கவேண்டும், அதிர்ஷ்டமற்ற வாரம்.

### சிங்கம்

[மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம் முடிய]

தொழிலில் செய்திறமை குன்றும், தேவையானவரைப் பகைத்துக் கொள்வர். வீட்டில் வீண தொல்லைகளுக்கு முகம் கொடுக்கவேண்டும். பண நிலை மந்தமுண்டு. பொதுத்துறை ஈடுபாடு அதிக செலவைத் தரும். முயற்சிகள் பலன் தராது, ஏமாற்றம் தரும் வாரம்.

### கன்னி

[உத்தரம் 2ம் பாதம், அத்தம், சித்திரை 2ம் பாதம் முடிய]

எதிர்ப்பினைச் சமாளிப்பீர்கள், முயற்சிகளில் தீவிரமுண்டு செய்தொழில் லாபம் தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி காணலாம், உறவினர் ஆதரவு தருவர், தெய்வீகச் செலவுண்டு, பெரியோர் உபதேசம் மன நிறைவு தரும், கலகலப்பான வாரம்.

### துலாம்

[சித்திரை 3ம் பாதம் முதல் சுவாதி 3ம் பாதம் வரை]

தொழில் ஏற்ற இறக்கம் உண்டு, பணியாளர்கள் துன்பம் தருவர், வேண்டாத பயம் மனத்தை வாட்டும், குடும்பத்தில் அமைதிக் குறைவு, வேண்டாத சம்பவம் ஒன்றினால் குறை கேட்க நேரிடும், பணமுடை இருக்கும், சாதாரண காலம்.

### விருச்சிகம்

[விசாகம் 4ம் பாதம் முதல் அனுஷம் கேட்டை முடிய]

அதிகாரிகள் துயர் தருவர், மனதில் ஏக்கம் நிலவும், குடும்பத்தில் அன்னியோன்யம் குறைவாகக் காணப்படும், புத்திரர் கவலையுண்டு, வெளியார் ஒருவரின் நிர்ப்பந்தம் உண்டு, முயற்சிகள் தாமதமாகும், ஏற்றம் தராத வாரம்

### தனுசு

[மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம் வரை]

காரியங்கள் தாமதமாகும், தொழிலில் எதிர்பார்த்த நன்மை கிட்டாது, வீணை வதந்திகள் மனச் சஞ்சலத்தைத் தரும், குடும்பத்தில் கவலைகள் மிகுந்திருக்கும், நண்பர்கள் ஒத்துழைப்புக் குறைவாக இருக்கும். பணக் கஷ்டம் உண்டு, தாமதமான பலன் தரும் வாரம்,

### மகரம்

[உத்தராடம் 2ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2ம் பாதம் வரை]

தொழில் முதலீடுகளும், அதிக வருவாயுமுண்டு, பிறர் உதவியுண்டு, திருமணப் பேச்சுக்கள் பலன் தரும். குடும்ப சிறப்புண்டு, நற்காரியங்கள் கைகூடும், பெற்றோர் பகமை நீங்கும். செல்வந்தர் நட்புண்டு. மாமியார் பெருமையுண்டு, அதிஸ்டவாரம்.

### கும்பம்

[அவிட்டம் 3ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3ம் பாதம் வரை]

தொழில் எதிர்பார்ப்புக்கள் குறைவாக இருக்கும், சகோதர பகையுண்டு, வீட்டில் அமைதிக்குறைவு காணப்படும், எதிர்பாராத செலவு உண்டு, காரியங்கள் கைகூடுவது தடைப்படும், ஏமாற்றம் காணப்படும், கடன் சுமையுண்டு, வீண்பழி உருவாகும், நம்பிக்கை குறைந்த வாரம்.

### மீனம்

[பூரட்டாதி 4ம் பாதம் முதல் உத்தரட்டாதி ரேவதி வரை[

குடும்பத்தில் இனம்புரியாத அமைதியுண்டு, நீண்டகாலப் பிரச்னை தீர்வுக்கு வரும். குற்ற உணர்வு மனதை வருத்தும், கடன்பட்டு கருமமாற்ற வசதியுண்டு, அதிகாரிகள் ஒத்துழைப்புத் தருவர், புதிய ஸ்தானம் கிட்டும், நன்மை தீமை கலந்த வாரம்.

கணிப்பு: ஜோஸ்யர்

★ "ஈழநாடு வாரமலரை"
வருக! வருக!! என வரவேற்கிறோம்!

திருமாட்டி புடவைக் கடல்
122, மின்சாரநிலைய வீதி,
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

# பொது விளையாட்டு மைதானங்கள் யாழ். மாவட்டத்தில் இல்லை!

யாழ். மாவட்டத்தில் விளையாட்டுகளின் தரங்கள் தற்போது குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளதாக அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக உதைபந்தாட்டம், கிரிக்கெட், வலைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கராட்டி போன்ற விளையாட்டுக்கள் மிக வேகமாக விருத்தி அடைந்து வருகின்றன. இவ்விளையாட்டுகளின் வளர்ச்சி எந்த அளவில் உயர்ந்துள்ளது? என்பதை கணிப்பதற்கு எமது விளையாட்டு வீரர்கள் வெளியிடங்களுக்குச் செல்லவோ அல்லது வெளியிடத்து வீரர்கள் இங்கு வந்துபோட்டிகளில் பங்குபற்றவோ சந்தர்ப்பங்கள் எற்படுத்தப்பட்டால் எமது விளையாட்டு வீரர்களின் தரங்களைக் கணித்து அதற்கான பயிற்சிகளை வழங்க முடியுமென்று பல விளையாட்டுத்துறை பயிற்சியாளர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றார்கள்.

இப்போட்டிகள் அனைத்திலும் உதைபந்தாட்டத்தின் தரம் மிகவேகமாக வளர்ச்சி அடைந்துவருகின்றது என்று வெளியிடத்தவர்கள் தற்போது கூறத்தொடங்கியுள்ளார்கள். உதாரணமாக இம்முறை ஆகில இலங்கை பல்கலைக்கழகங்களிடையே மொறட்டுவாவில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உதைபந்தாட்டப் போட்டியில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதினால் எமது உதைபந்தாட்டத்தின் வளர்ச்சியை நாம் ஓரளவுக்கு கணிக்கக் கூடியதாகவே இருக்கின்றது.

### 'தேவா'

இப்போராட்ட காலத்திலும் வடபகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் விளையாட்டுப்போட்டிகள் நாளுக்கு நாள் சூடுபிடித்துக்கொண்டே இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம். யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவின் அயராத சேவை என்றே கூறப்படுறது. இக்குழு உதயமாகிய பின்புதான். கிராமப்புறங்களில் இலைமறைகாயாக இருந்த விளையாட்டு வீரர்களின் திறமைகள் வெளி உலகத்துக்கு தற்போது தெரியவந்துள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் மேலும் விருத்தி அடையச் செய்வதற்கு யாழ். மாவட்டத்தில் ஒரு பொது விளையாட்டு மைதானம் இல்லாமல் இருப்பது பெரும் குறையாக இருக்கின்றது.

எந்த ஒரு விளையாட்டுப் போட்டியையோ அல்லது விளையாட்டுப் பயிற்சிகளையோ நடாத்துவதாக இருந்தால் பெரும்பாலும் பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களையே நாட வேண்டி இருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் பொது விளையாட்டு மைதானங்கள் இருந்தால் வருங்காலத்தில் யாழ். மாவட்ட விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத்தரம் மேலும் வளர்ச்சியடையும் என்று துணிந்து கூறலாம். யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு இவ்விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தி அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு பொது விளையாட்டு மைதானத்தை உருவாக்கவேண்டும் என்பதே விளையாட்டு வீரர்களினதும் பயிற்சியாளர்களினதும், விளையாட்டுச் சங்கங்களினதும் அவாவாகும்.

# இன்று யுத்தங்களில் பாவிக்கப்படும் ஏவுகணைகள்

அமெரிக்காவின் 'ஹீட் சீகிங்' ஏவுகணை அதிக உஷ்ணத்தை வெளியிடும் ஜெட் விமானங்களை இலகுவில் தாக்ககூடியது.

இன்றுஉலகில்உற்பத்திசெய்யும் ஏவுகணைகள் 3.5 மைல் தொடக்கம் 8,500 அடி தூரம் வரை செல்லக்கூடியதாக இருக்கின்றது. 'அக்னி' என்ற ஏவுகணை நீண்ட தூரம் சென்று குறித்த இலக்கை அடையக்கூடியதாக அண்மையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. 'சாம்' ஏவுகணை ரஷ்யாவின் தயாரிப்பாகும்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சிறிய ஏவுகணைகள் விற்பனைக்கு இருக்கின்றன. சர்வதேச ஜென்டிபென்ஸ் வீக்லீ என்ற சஞ்சிகையில் எவுகணைகளை உட்பட புதிதாக அறிமுகப்படுத்தப்படும் யுத்ததளபாடங்களின் விபரங்கள் வாரந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன.

அத்தோடு உலகை தன் கீழ் முடக்கி வைக்கக், கூடிய 'வலிஸ்டக்' ஏவுகணை தொடக்கம் தாமாகவே இலக்கை கண்டுபிடித்து தாக்கக்கூடிய 'தக்வலிஸ்டக்' ஏவுகணைவரை சாம், ஹீட் சீகிங் வர்க்க ஸ்ரிங்கர் ஏவுகணைவரை உள்ளது,

ஹீட் சீகிங் ஸ்ரிங்கர் தற்போது நவீன முறையில் திருத்தி அமைத்துள்ள P.M.T. 92 A வர்க்க ஏவுகணையும் தற்போது புழக்கத்தில் உள்ளன. இது தானகச் சென்று தாக்குதல் நடத்தக்கூடியது. இந்த எவுகணை விமானத்தில் அதிக உஷ்ணப்பகுதியில் உள்ள எஞ்சினை தாக்கி வெடிக்கிறது.

ஸ்ரிங்கர் F I M 92 A ஏவுகணை அமெரிக்காவின் உற்பத்தியாகும். கையில் கொண்டு செல்லக்கூடியவாறு இந்த ஏவுகணையின் நீளம் 60 அங்குலமாகும். அகலம் 2.75 அங்குலமாகும். இதை ஆகாயத்துக்கு ஏவும் லோஞ்சரின் நிறை 24 றாத்தலாகும். ஏவுகணையின் நிறை 35 றாத்தலாகும்.

'ரேட் ஐ' என்ற பெயரில் பழைய ஏவுகணைகள் ஸ்ரிங்கர் F I M 29 A ஆகும். 1982ம் ஆண்டு முற்பகுதியில் ஐரோப்பாவில் இந்த ஏவுகணை பாவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் நாட்டுக்கு எதிராகப் பாவிப்பதற்கு முஜயிடீன் தீவிரவாதிகளிடம் இந்த ஏவுகணை இருந்தது. சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தபோது முஜயிடீன் தீவிரவாதிகளுக்கு அமெரிக்காவால் வழங்கப்பட்டது என்று சொல்லப்படுகின்றது.

ஆனால் ஆப்கானிஸ்தான் கெரில்லாக்கள் வேறு ஓரிடத்தில் உள்ள கெரில்லா தலைமைப்பீடத்திலிருந்துபெற்றுக் கொண்டதாகக் கூறுகிறது.

பல லட்ச டொலர்களுக்கு கொள்முதல் செய்யாமல் சாதாரண விலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய Draagonm 47 என்ற பிரபல டாங்கிகளை சேதப்படுத்தும் ஏவுகணையும் உள்ளது. அமெரிக்காவில் செய்யப்பட்ட இந்த ஆயுதம் 46·2 அங்குல நீளமும் லோஞ்சர் 4·5 அங்குலம் கொண்டது. 30·3 றாத்தல் நிறை கொண்டது. மணித்தியாலத்துக்கு 230 மைல் பாயக்கூடியது. மோட்டார் மூலம் செல்லக் கூடிய இந்த ஏவுகணையில் 5 றாத்தல் எடை கொண்ட வெடிக்க வைப்பதற்கான பொருட்கள் உள்ளன.

(10-ம் பக்கம் பார்க்க

## கின்னஸ் சாதனைகள்

### பெரிய பத்திரிகை

உலகில் விசாலமாகஅச்சடிக்கப்பட்டு விநியோகித்த பத்திரிகையின் பெயர் ''Het-Volk''. இது ஒரு தினசரிப் பத்திரிகையாகும். 1993 யூலை மாதம் 19ஆம் திகதி அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்ட பத்திரிகையின் விசாலம் 142X99·5 சென்றிமீற்றராகும். இது நாளொன்றுக்கு 50,000 பத்திரிகை விற்பனையாகின்றது.

### விலையுயர்ந்த குதிரை

உலகத்தில் பெறுமதியான குதிரைகள் றேஸ் குதிரைகளாகும். இப்படியாக அமெரிக்வாவில் ஒரு குதிரை 13·1 மில்லியன் டொலருக்கு விற்பனையாகியிருக்கிறது. அமெரிக்காவில் உள்ள கென்டகி பிராந்தியத்தில் வசிக்கும் றொபட் சன்ச்சடர் என்பவரால் இந்த விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ளது.

'ஈழநாடு' வாரமலர் மீண்டும் மலருவதை வாழ்த்துகிறோம்!

கலாலயா விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம்.

மருத்துவம்

இயற்கை எனும் அற்புத மருத்துவம்

# தெய்வீகத் துளசி

கிருஷ்ண தெய்வத்தின் குறியீடாக நாம் துளசியைப் போற்றி வழிபடுகின்றோம். அநேகமாக வீடுகளில் துளசி மாடம் கட்டி வழிபடப்படுகின்றது. இதன் மருத்துவ மகிமைகளை அறிந்தவர்தான் எத்தனை பேர்?

துளசியைக் கொண்டுவந்து 5, 6 மணிநேரம் தண்ணீரில் ஊறப் போட்டு, பின்பு அந்த நீரை மாத்திரம் சாப்பிட்டு வந்தால் எந்த நோயும் நம்மை அணுகாது. இந்த அடிப்படையில்தான் கிருஷ்ணன் கோவில்களில் துளசி தீர்த்தம் வழங்கப்படுகிறது.

தினமும் சளி, மூக்கில் சளி ஒழுகுதல் இருமல் நோயால் அவதிப்படுகிறீர்களா? மூக்கை அடிக்கடி சிந்தி புண்ணாகிவிட்டதா? கவலையை விடுங்கள் 5. 6 துளசி இலைகளுடன் சிறிது இஞ்சியையும் சேர்த்து நன்ருக மென்று விழுங்குங்கள் சற்று காரமாக இருக்கும் வெந்நீர் அருந்த எல்லாம் சரியாகிவிடும். இன்னும் வாய் நாற்றம் பல்நோய்கள் எல்லாவற்றையும் தடுத்து விடுகிறது துளசியிலை இஞ்சி சேர்ந்த கஷாயம் சுரத்தைக் கூட ஓட விரட்டிவிடுகிறது.

தலைவலி என்று நினைத்தாலே அந்தத்தலைவலி நம்மை எல்லாம் ஒரேயடியாக ஆட்டிப்படைக்கின்றது. இந்தத் துளசி அதை இலகுவில் போக்குகின்றது. துளசியுடன் சிறுதுண்டு சுக்கு 2 இலவங்கம் சேர்தது நன்ருக அரைத்து நெற்றியிலும் தலையைச் சுற்றிலும் பற்றுப்போட உடனே தணியும்.

காதுமந்தம், காதுவலி, காதில் சீழ்வடிதல் இரத்தம் வடிதல் எதுவாகிலும் துளசிச் சாற்றைச் சிறிது சூடாக்கி காதில் 2, 3 துளிகள் விட்டுவர அவை எளிதில் குணமாகிவிடுகின்றன. மயக்கம் வந்து விழுந்தவரைக்கூட இந்தத் துளசி மயக்கத்தை தெளிவித்து எழுப்பி விடுகிறது. காய்ந்த துளசிஇலையை ஒரு துணியில் வைத்து அதனைத் துணிபோன்று சுருட்டி ஒரு முனையில் தீவைத்து அணைத்து உடனே வரும் புகையை மெதுவாக மூக்கினருகில் பிடிக்க மயக்கம் தெளிந்து விழுந்தவர் எழுந்து விடுவார். ஏன் சாப்பிட்ட விசத்தைக் கூட இந்த துளசிச்சாறு முறிக்கிறது.

பாம்புக் கடிக்கும் இந்தத் துளசி பயன்படும். செய்தி உங்களுக்கு வியப்பாகலாம் பாம்பு கடித்ததும் ஒரு தம்ளர் துளசிச்சாற்றை உள்ளுக்கு பருகக் கொடுப்பதுடன் உடல் முழுவதும் சாற்றினுல் தேய்க்க வேண்டும். அத்துடன் தொப்புளின் மீதும் துளசிச்சாற்றினுல் பற்றுப் போடவேண்டும்.

பேன்களுக்கு துளசி விசம் மாதிரி. துளசி இலைகளை கொண்டு வந்து தலையணை மீது பரப்பி மெல்லிய துணியை விரித்துப் படுங்கள் மூன்று நாட்களில பேன்முற்ருகவேஒழிந்துவிடும். வாலிபர்களுக்கோ, பெரியவர்களுக்கோ இரவில் தூக்கத்தில் 'சொப்பனஸ்கலிதம்' ஏற்படுவதனைத் தடுக்க, துளசி விதைகளை நீரில் ஊற வைத்து மறுநாள் காலையில் நன்கு அரைத்து பசும்பாலில் கலந்து காலையில் வெறு வயிற்றில் கொடுத்துவர பிறகு அந்தத் தொல்லையே இராது.

இருதய பலவீனமுள்ளவர்களும், வேறு வகையில் இருதய நோயுள்ளவர்களும் 20 சொட்டு தேனுடன், 7 சொட்டு துளசிச் சாறும், சிறிது நீரும் கலந்து உள்ளுக்கு 1 மண்டலம் வரை (40 நாள்) சாப்பிட்டு வர குணம் காணலாம்.

டாக்டர் செல்வி

நாகேஸ்வரி நாகலிங்கம்

கிழக்கில்:

# திட்டமிட்ட குடியேற்றம்

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை சிறுபான்மை ஆக்கும் நோக்குடன் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடைபெற்று வந்ததை வரலாற்று ரீதியாக பலரும் அறிவர். தமிழர் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்டு அதே இடங்களில் சிங்களக குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதையும் அந்தக் கிராமங்கள் சிங்களப்பெயர் சூட்டப்பட்டு சிங்கள மாவட்ட நிர்வாகத்துடன் குடியேற்றங்கள் நடைபெற்று வந்ததையும் வரலாற்று ரீதியாகலர் அறிவர்.

காலத்துக்கு காலம் மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள அரசாங்கங்கள் கச்சிதமாக இத்திட்டமிட்ட குடியேற்றங்களை நடாத்தி வந்தன.

வடமுனை, வெலி ஓயா, வெலிகத்தை. மகா ஓயா, புன்னைக்குடா, கல்க்குடா ஆகிய இடங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களும் வாகரைப் பிரதேசத்தில் றெதிதெனிய' என்ற பகுதி பெயர் மாற்றபட்டு அங்கு 300. குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. மகாவலி குடியேற்றம் என்ற போர்வையில் வாகரைப்பிரதேச செயலாளருக்கும் தெரியாமல் இக் குடியேற்றம் நடந்துள்ளது.

ஓமறியா மடுக்குளம், ஜெயந்தி யாயபுர என மாற்றப்பட்டுள்ளது, கிரிமாச்சன் 'கசரபுர' என மாற்றப் பட்டுள்ளது. காணி அதிகாரியின் அனுமதியின்றி மருதங்கேணியில் 150 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன இவ்வாறு கிழக்குமாகாண திட்டமிட்ட குடியேற்றம் இடம்பெறுகிறது:

—முரளி

## இன்று யுத்தங்களில்

(9.ம் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த ஸ்ரிங்கர் ஏவுகணைகள் ஆரம்பத்தில் உற்பத்தி செய்யப்படும் முழுத் தொகையும் அமெரிக்க இராணுவம் வாங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது. பின்பு அமெரிக்க இராணுவ மூலம் உலகம் பூராகவும் பாவனைக்கு வந்துள்ளது.

சீனக்குட்டிக் கதை:

## மனப்பார்வை

அவன் பணத்தை தொலைத்துவிட்டான். அடுத்த வீட்டுக்காரன் திருடிவிட்டதாக அவன் நினைத்தான். அடுத்த வீட்டுக்காரனை உன்னிப்பாகப் பார்த்தான்.

அவன் தோற்றம், நடவடிக்கைகள், அசைவுகள் எல்லாம் அவனைத் திருடனுகவே அவனுக்குக் காட்டின.

அந்தப் பணம் முங்கில் குழாயில் பவுத்திரமாக இருப்பதைக் கண்டான்.

அப்பொழுது—

அடுத்த வீட்டுகாரனை உன்னிப்பாகப் பார்த்தான். அவன் தோற்றம நடவடிக்கைகள் அசைவுகள் எல்லாம் திருடனுகவே காட்டவில்லை.

—தமிழில் பத்மன்

## விடுகதை

1. எட்டுக்கால் ஊன்றி இரு கால் படமெடுத்து வட்டக்குடை பிடித்து வாருன் எங்கள் மகாராசன் அவன் யார்?
2. வட்ட வட்டக் குருவி வண்ண வண்ண குருவி செல்லாத இடம் எல்லாம் சென்று வரும். இது என்ன?
3. அடிச்சால் சிரிப்பான் கடிச்சால் இனிப் அவன் யார்?
4. ஒரு கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை அது என்ன?
5. பார்க்க அழகான பூ. கையில் எடுக்க முடியாத பூ. அது என்ன?
6. ஒருவருடம்வாழ்ந்துபன்னிரண்டு பிள்ளை பெறுவாள். அவள் யார்?

விடை

1. நண்டு 2. பணம் 3. தேங்காய் 4. மிளகாய் 5. நெருப்பு 6. மாதக் கலண்டர்.

—எஸ். பிரியதர்சினி

யாழ். கனகரத்தினம் ம. ம. வி.

## லண்டன் பூனையார்

எங்கள் வீட்டுப் பூனை யார்
இங்கிலாந்து போகிருர்
அங்கிருந்து இராணியார்
அரண்மனைக்குப் போகிருர்
அரசியாரைக் காணவே
அரண்மனைக்குப் போனவர்
கதிரை ஒன்றின் கீழே ஏன்
கண்ணை உறுட்டிக் காட்டுவன்
லண்டனுக்குப் போனவர்
சுண்டெலியைக் கண்டதும்
சண்டித்தனம் செய்கிருர்
சந்தோசமாய் வருகிருர்.

[அடுத்த வாரம் நேர்காணல்]

கவிஞர்

சத்தியசீலன்

## வரலாற்று

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

வதாக சந்திரிக்கா கூறிஞராம். கேள்வி கேட்டவர்களும் முட்டாள்கள். பதில் சொன்ன சந்திரிக்கா தான் அதிகாரமுள்ள ஜனதிபதி அல்ல என்பதையும் நிரூபித்துள்ளார் நாடகமே உலகம்!

பொது அறிவு

## தெரிந்துகொள்ளுங்கள்

| நாடுகளும், | தலை நகரங்களும், | நாணயங்களும் |
|---|---|---|
| ஜேர்மனி | பொன், பேர்லின் | மார்க் |
| கியூபா | ஹவாஞ | பெசோ |
| கனடா | ஒட்டாவா | டொலர் |
| பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் | ரூபா |
| ஈரான் | தெஹ்ரான் | ரியால் |
| பிரான்ஸ் | பரிஸ் | பிராங் |
| இந்தியா | புதுடில்லி | ரூபா |
| இஸ்ரேல் | டெல்அவிவ் | பவுண் |
| சீஞ | பீக்கிங் | யுவான் |
| பிலிப்பைன்ஸ் | மணிலா | பெசோ |
| லெபனுன் | பேரூட் | பவுண் |
| வியட்நாம் | ஹோசிமின் சிமற்றி | டோல் |
| எத்தியோப்பியா | எடிங் அபாபா | டொண் |
| இத்தாலி | ரோம் | லீரா |
| ஐ. இராச்சியம் | லண்டன் | பவுண் |
| ஸ்பெயின் | மட்றிட் | பேசோ |
| சுவீடன் | ஸ்ரொஹொம | குரோன |
| சுவிஸ்லாந்து | பேர்ண் | பிராங் |

—சரவணன்

# 2000 ஆண்டில் உலகம் அழியுமா?

கி. பி. 2000 ம் ஆண்டில் உலகம் அழிந்து விடும் என்று சிலர் கூறுகின்றுர்கள். இதில் உண்மைகள் இருக்கிறதா? விஞ்ஞானிகள் இது பற்றி என்ன கூறுகிறுர்கள் என்பதுதான் இன்றைய கேள்வியாகும்.

அலெக்சாண்டர் செக்கொச்சி என்ற ரஷ்ய விஞ்ஞானி பூமியை நோக்கி ஒரு குட்டிக்கிரகம் வந்து கொண்டு இருப்பதாகவும், இது மோதினல் பேரழிவு ஏற்படும் என்று கூறுகின்றுர். இது 2119 ம் ஆண்டில் பூமியில் மோதும் என்றும் அவர் கூறுகின்றுர். அணு ஆயுதப் போர்குறித்ததான ஆபத்துக் குறித்து ஒரு அறிவியல் சஞ்சிகை அமெரிக்காவில் ஒரு இறுதி நாள் கடிகாரத்தை அதாவது டூம்ஸ் டே குளக் என ஒரு கடிகாரத்தை வைத்துள்ளது. அமெரிக்காவும் ரஷ்யாவும் அணு ஆயுதத்தை குறைக்க ஒப்புக்கொண்டு விட்டதால் கடிகாரத்தின் முட்களை பின்னுக்கு தள்ளி வைத்து விட்டார்கள். ஒக்ஸ்போட் பல்கலைக்கழக வானியல் பௌதிக விஞ்ஞானி டாக்டர் விக்டர் க்ளப் என்பவர் இன்னும் நூறு ஆண்டுகளில் பூமியுடன் வால் நட்சத்திரகங்கள் மோதும் என்று கூறி இருக்கின்றுர்.

இதற்கு முன்பும் உலகம் அழியும் என்ற கதைகள் பல தடவைகள் வெளிவந்துள்ளன.

1970 ம் ஆண்டுக்கு முன்னர் அஷ்ட கிரக சேர்க்கையின் போதும், பின்னர் ஸ்கைலாப் விண் கூடு பூமியை நோக்கி வந்தபோதும் பத்திரிகைகள் தேவையற்ற பீதியைப் பரப்பின.

சீனவில் 1890 ம் ஆண்டு ஒரு மொழிபெயர்புத் தவறு காரணமாக பூமியின் மீது பெரிய கிரகம் மோதப்போவதாக செய்தி வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்பு மொழிபெயர்ப்பு தவறு என்று திருத்தம் வெளியானதுடன் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

ரஷ்யாவில் 1983 ம் ஆண்டு திடீரென்று தொடர் கடிதம் இயக்கம் நடந்தது. அதில் பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் கடவுள் தோன்றி உலகம் அழியப் போவதாகக் கூறிவிட்டதாகவும் எல்லோரும் பிரார்த்தனை செய்தால் அதனை தவிர்க்கலாம் என்றும் இதைக் கண்ட ஒவ்வொருவரும் ஒன்பது கடிதத்தினை நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எழுதாவிடில் ஆபத்து வரும் என்றும் எழுதப்பட்டிருந்தது. கம்யூனிஸ்ட் ரஷ்யாவில் இப்படி தொடர் கடித இயக்கம் நடந்தது வியப்பான விசயமாகும்.

பூமிக்கு மிகவும் அருகில் ஒரு குட்டிக் கிரகமோ வால் நட்சத்திரமோ வருவது இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்கிறது. சில மாதங்களுக்கு முன்பு ஷூமேக்கர் லெவி - 9 என்ற வால் நட்சத்திரம் பூமியில் மோதி விடும் ஆபத்து இருந்தது நாம் அறிந்ததே. ஆனலும் அந்த ஆபத்தில் இருந்து நாம் தப்பித்து விட்டோம் எனி அந்த ஆபத்து நிகழ பல வருடங்களாகும். அவ்வாறு நிகழ்ந்தாலும் கூட அந்த ஆபத்தில் இருந்து தப்பக்கூடிய பல அரிய முயற்சிகளைக் கண்டுபிடித்து விடுவார்கள்.

இருந்த போதிலும் விஞ்ஞானிகள் உலகம் எப்போதும் அழியும் என்பதைக் கணக்கிட்டு எப்படி அழியும் என்பதை துல்லியமாகக் கவனித்து வருகிறுர்கள்.

தொகுப்பு: வானேசை.

# விடுதலை உணர்வு வரும்போதுதான் எமக்கு விடுதலை கிடைக்கும்

## - புதுவை உரை

[உடுவில்]

''குயிலைப்பிடித்து கூட்டில் அடைத்து வைததால் அது கூவாது. மயில் ஆடாது ஆனால் சொந்தமான ஒரு நிலம்இன்றி சுதந்திரம் இன்றி நாம் ஆடுகிறோம். பாடுகிறோம் மகிழ்ச்சியடைகிறோம எம்மில் எத்தனை பேர் விடுதலை உணர்வை பெற்றுள்ளார்கள்? எமது மண்ணுக்குரிய பெருமையை எத்தனை பேர் உணர்ந்துள்ளார்கள்? விடுதலை உணர்வு எமக்கு வருகின்றபோதுதான் எமக்கு விடுதலைவரும்; தமிழீழம் மலரும்.

உடுவில் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற கலைவிழா இறுதிநாள் நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றிய கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தின துரை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: தமிழர்கள் சாமானிய மானவர்கள அல்லர். நீண்ட வரலாற்றுக்குரிய இனம் எமது இனம். 1505ஆம் ஆண்டுமுதல் எமது இறைமையை இழந்து இன்றுவரை அடிமைகளாகவே வாழ்ந்து வருகிறோம்.

உலகம் முழுவதும் ஆறு கோடி தமிழர்கள் வாழ்ந்தும் அவர்களுக்கென சொந்தமான ஒரு நிலம் இல்லை

எமக்கு பேச்சுவார்த்தை மேடையில் விடுதலை கிடைக்கப் போவதில்லை. பிரச்னையைத் தீர்க்க தீர்வுத்திட்டம் கேட்டோம். தீர்வுத்திட்டம் தந்தால் பிரச்னை வரும் என சந்திரிகா அரசு கூறுகிறது. இவர்களா சமாதான முறையில் எமது உரிமைகளை தரப் போகிறார்கள்?

விடுதலைப் புலிகள், ஆள வேண்டும் என ஆசைப்பட்டவர்களல்லர். போராட்டத்தில் கையிழந்து, கால் இழந்து நிற்கும் போராளிகளா ஆளப் போகிறார்கள்? நாம் வேண்டுவதெல்லாம் இந்த மண்ணின் சுதந்திரத்தைத் தான் தேசிய தலைவரின் தலைமையில் எமது சுதந்திரத்தை பெறுதுவிடின என்றுமே நாம் அடிமை இனம் தான்.

விடுதலை வேண்டி போராடப் புறப்பட்டவர்கள் இன்று, அரசு எடுக்கும் எந்தமுடிவையும் ஏற்போம் என்ற நிலையில் உள்ளார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் வாழ்வும் சாவும் தமிழ் மண்ணில்தான். தமிழ் இனத்துடன்தான் என்ற நிலையில் வாழ்கிறார்கள்.

எமது போராட்டபாரத்தை நீங்களும் கொஞ்சம் ஏற்றுக் கொண்டால் நாளை மலரும் தமிழீழம் இன்றே கிடைதது விடும்என்றார்.

விடுதலைப் புலிகள் அரசியல் துறை மகளிர் அமைப்பு யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி சு. தணிகைச்செல்வி பேசுகையில்; எமது பாரம்பரிய கலை, பண்பாடு. மொழி இனம் ஆகியவற்றைப்பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதற்காக கடந்த 22 ஆண்டுகளாக ஆயுதம் ஏந்திப்போராடுகிறோம். தமிழீழத்தை இதுவரை நாம் பெறமுடியவில்லை. மக்கள் ஒவ்வொருவரும் போராட்டத்தில் பங்கேற்றால் விரைவில் எமது இலக்கை அடையலாம்.

உலக நாடுகள் யாவும் ஆராய்ச்சி செய்து எமது போராட்ட யுக்தியை கண்டறியமுனையும் அளவுக்கு நாம் போராட்ட வளர்ச்சி பெற்றுள்ளோம்.

இன்று நாம் எமக்கென நீதித்துறை, காவற்றுறை, கலை பண்பாடு, மாணவர் கல்வி மேம்பாடு, பொருளாதாரக் கட்டமைப்பு போன்ற பல அமைப்புகளை உருவாக்கியுள்ளோம்.

எமது பிரதேசத்துக்கான ஆட்சிப்பொறுப்பை பெறவே போராடுகிறோம். தென்பகுதியில் போதிய நிலம் இருந்தும் சிங்களவர் எம் மண்ணை ஆக்கிரமிக்க, ஆட்சேர்ப்பு மையங்களை உருவாக்கி, பல இளைஞர்களை திரட்டுகிறார்கள். அவர்களை எதிர்த்து போராட வயது வித்தியாசம் இன்றி வீட்டுக்கொருவராவது போராட்டத்தில் இணைந்து கொள்ளவேண்டும் என்றார்.

109 - சி

---

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—05—21**

ஞாயிறு இரவு

8-02 இசையரங்கம்
8 30 செய்திகள்
8-40 தொடர் நாடகம் - கருணைரவி எழுதும் 'கணிநிலம்வேண்டும்' அங்கம் 10

**1995—05-22**

திங்கள் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச்செய்திகள்
7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—05—21**

ஞாயிறு மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 மழலைகளுக்காக
5-30 கதம்பம்
6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

---

### பலதும் பத்தும்

#### நம்ப மறுப்பு!

முதலில் - 605 இருத்தல் விமானத்தில் 852 அடி தூரம் வரை ஒரு நிமிடமே பறக்க முடிந்தது எவரும் நம்பவில்லை 1905ல்...39 நிமிடங்களில்...24 மைல் தூரம்விமானத்தில் பறந்து திரும்பியதாக வில்பர் ரைட் சொன்னார். நம்பவில்லை.

காரணம் என்ன தெரியுமோ? காற்றைக்காட்டிலும் பாரமான எதுவும் பறக்க முடியாது என்றே அன்றைய பௌதிகவிஞ்ஞானம் கூறிக்கொண்டிருந்தது.

1908 ல் பறப்பதில் அதிக வெற்றி. இதனை நிருபர் பத்திரிகை ஆசிரியருக்கு அறிவித்தபோது, ''கற்பனை வேண்டாம்! செய்தியே வேண்டும்! என எச்சரித்தார்.

நிபுணனை இன்னோர் நிருபரை அனுப்ப... அவனும் அதே செய்தி கொண்டு வர...ஆத்திரமடைந்த பத்திராதிபர் அந்த நிருபரை வேலையிலிருநதே நீக்கினாராம். பின்னர்... தந்தி அலுவலக உயரதிகாரி ஒருவரின் வாக்குமூலததின் பின்பே செய்தி ஏற்கபபட்டது; நிருபருக்கு வேலை கிடைத்தது...!

— மயூரன்

---

### நாளைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின் விபரம்:

நாளை 3 மணிக்கு ஆரம்பமாகும் முதல் போட்டியில் சென். அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து உதயசூரியன் கழகமும், 2வது ஆட்டத்தில் யுத் கார்மல் கழகத்தை எதிர்த்து விண்மீன் கழகமும், 3வது ஆட்டத்தில் ஈச்சமோட்டை கழகத்தை எதிர்த்து பொற்பதி கழகமும் மோதுகின்றன.

(வி சி)

---

### பரு. வைத்தியசாலை நூற்றுண்டு மலர் வெளியீட்டு விழா

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நூற்றுண்டு மலர் வெளியீட்டு விழா பருத்தித்துறை அரசினர் மருத்துவமனை விரிவுரைமண்டபத்தில் நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். சிவபாலன் தலைமையில் நடைபெறும்.

மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ஆர். குழந்தை வடிவேல், பிரதம லிகிதர் திரு. சீ ஆர். சிவநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்

நூற்றுண்டு மலரின் முதற் பிரதியை, விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு டாக்டர் செல்வி பத்மலோஜினி வெளியிட்டுவைக்க, மந்திகை மருத்துவமனை குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் கே. இராசலிங்கம் பெற்றுக்கொண்டார்.

மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ஆர், குழந்தை வடிவேல், குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் கே. இராசலிங்கம், பிரதம லிகிதர் திரு. சீ. ஆர். சிவநாதன் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

(160)

---

### 2 றேடியோக்கள் திருட்டு

(ஆனைப்பந்தி)

வீட்டிற்குள் வைக்கப்பட்டிருந்த இரண்டு றேடியோக்கள் திருட்டுப்போயுள்ளன.

திங்கள் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்த மு. மயில்வாகனம் என்பவருடைய வீட்டிலிருந்த சுமார் 7650 ரூபா பெறுமதியான இரண்டு றேடியோக்களும் திருட்டுப்போயுள்ளதாக யாழ். காவல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

### புதிய நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளையின் வலிகாமம் மேற்கு பிரிவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில்வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் டாக்டர் எஸ் சிறிராஜசேகரம் உபதலைவர் க. திரவியம் செயலாளர் வி. உதயசூரியன் பொருளாளர் எம். ஜெயரஞ்சிதன். 72

---

அரசியல் யாப்பு திருத்தம்

# நாடாளுமன்ற தெரிவுக்குழு அடுத்தவாரம் மீண்டும் கூடும்

(கொழும்பு)

அரசியல் யாப்பு சீர்திருத்தம் சம்பந்தமான நாடாளுமன்ற தெரிவுக்குழு எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமைகளில் மீண்டும் கூடவிருக்கிறது.

இதுவரையில் இக்குழுவின் முன் தம் கருத்துக்களைத் தெரிவிக்கா திருக்கும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளை இந்தக்குழு சந்திக்கும்.

எதிர் வரும் 25-ம் திகதி சிங்கள மகா சம்பத பூமி புத்ர கட்சியும், 26-ம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் குழுவின் முன் தமது கருத்துக்களைத் தெரிவிக்கவிருக்கின்றன.

இந்த இரண்டு கட்சிகள் தவிர்ந்த பதிவு செய்யப்பட்ட எல்லா அரசியல் கட்சிகளும் குழுவின்முன் ஏற்கனவே சாட்சியமளித்திருக்கின்றன.

அரசியல் யாப்பு சீர்திருத்தம் சம்பந்தமான நாடாளுமன்ற தெரிவுக்குழு அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்கள் உட்பட பல்வேறு அமைப்புகளிடமிருந்து சுமார் 750 மனுக்களைப் பெற்றிருக்கிறது. [இ]

---

### 15 விறகு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நாகர் கோவில் காவல் துறையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட வியாபாரிகள், தற்பொழுது விசாரணைகளுக்காக நாகர் கோவில் காவல் பணிமனையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 160 சி

---

# கைதான அதிகாரி கொழும்பில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்திற்கு கொழும்பில் பொருள்களை கொள்முதல் செய்து வடபகுதிக்கு கப்பலில் அனுப்பி வைக்கும் மேற்படி சமாச கொள்முதல் அதிகாரி திரு. கணேசமூர்த்தி கொழும்புத் துறைமுகத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதிப்பத்திரம் இன்றி சில பொருள்களை ஏற்றுப்போதே இவர் கைது செய்யப்பட்டார் என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

பிந்திய தகவலின் படி கடற்படையினரால் கைது செய்யப்பபட்ட திரு. கணேசமூர்த்தி நேற்று முன்தினம் மாலை விடுதலை செய்யப்பட்டார் என்று சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினூடாக கொழும்பில் இருந்து மேற்படி சமாசத்திற்கு அறிவிக்கப்படுகிறது. (170 சி)

---

### மாறி வரும் உலகின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தப் பலத்தின் மூலமாக எமது மண்ணை மீட்டு வருகிறோம் எமது தேசத்தில் ஒரு சட்ட நிர்வாக ஒழுங்கை கட்டியமைத்து வருகிறோம். இந்தச் சட்ட ஒழுங்கும் நீதி நிர்வாகமும் எமது மக்களின் தேசியக் கட்டமைப்பை பலப் படுத்துவதாக அமைய வேண்டும் எமது இனத்கின் பண்பாட்டு வாழ்வை மேம்படுத்த வேண்டும்.

தமிழீழ நீதி நிர்வாகத் துறை திறம்படச் செயற்படுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மட்டுமன்றி, சிங்களப் பத்திரிகையாளர்கள் கூட எமது நீதி நிர்வாக முறையை புகழ்ந்துரைத்திருக்கிறார்கள் நேர்மையும், கண்ணியமும். ஒழுக்கமும் நிறைந்த எமது போராளிகள் சட்டவாளர்களாகவும், நீதியாளர்களாகவும் கடமைபுரிவதால் நீதித்துறை ஊழலற்ற முறையில் செம்மையாகச் செயல்படுகிறது. எனினும் எமது நீதி நிர்வாகத்துறை மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு இன்னும் செம்மையாகச் செயற்படவேண்டும் என்பதே எனது ஆவல். நீதித்துறையில் சேவை புரியும் எமது போராளிகள் உணர்வுகளுக்கும் உறவு முறைகளுக்கும் அடிமைப் படாது சமூக நீதிக்கு முதன்மைகொடுத்து செயற்பட்டால் எமது நீதித்துறை மேலும் உன்னதமடையும்.

எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் தொடர்கிறது அநீதிகள் இருந்துவருகிறது. ஆணாதிக்க கொடுமைகள் தொடர்கிறது. இந்த சமூக அநீதிகளிலிருந்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்'' என்றும் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டார்.

நேற்று இடம்பெற்ற உறுதிப்பிரமாணவைபவத்தில் மேன்முறையீட்டு நீதியாளர்களாக க. அன்பு, ச பூவேந்தன், மு. சுகிசரன் ஆகியோரும் நீதியாளர்களாக க. சீராளன் த. மனோகரன், த. செந்தூர் செல்வி வே. அல்லிராணி, செல்வி சி. கண்மணி ஆகியோரும் சட்டவாளர்களாக திரு. இ. இசையரசன், செல்வி த. அறிவுமதி ஆகியோரும் தேசியத் தலைவர் முன்னிலையில் உறுதிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

நீதிநிர்வாக துறையினரின் சட்டத்தின் திறவுகோல் சஞ்சிகையை நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனிடம் கையளித்து வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன், நீதியாளர்கள், சட்டவாளர்கள், அரச சட்டவாளர்கள், நீதிமன்ற பதிவாளர்கள், குடும்ப ஆலோசனைச்சபை உறுப்பினர்கள், தமிழீழ சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-சி)

---

### பத்தாயிரம் தமிழர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரை கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்படுபவர்கள் ஆண், பெண் மற்றும் வயது வேறுபாடின்றி மிக மோசமாக படையினரின் தாக்குதலுக்குள்ளாகி வருவதாகவும் தெரிய வருகிறது. இதேவேளை நாட்டின் ஏனைய பகுதியிலும் தமிழர் பெருமளவில் தினமும் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். -சி

---

**வீட்டினில் பயிர்கள் தழைத்தாலே போதும்**
**வாட்டமே இன்றி வாழ்வது போகும்**

# "எந்தவித தாக்குதல்களையும் சமாளிக்கும்வலிமை எம்மிடமுண்டு"

## - பூநகரி முகாம் தளபதி சவால் -

(கொழும்பு)

பாதுகாப்பு படையினர் எந்தவிதமான தாக்குதல்களையும் சமாளிக்கக் கூடிய அளவுக்கு போதியளவு வலிமை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். முகாமில் உணவுபபற்றாக்குறை கிடையாது இவ்வாறு பூநகரி முகாம் தளபதி பிரிகேடியர் சிசிர விஜய சூரிய தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் மனோ வலிமையும் மனத்துணிவுடனும் உள்ளனர் எந்தவித தாக்குதலுக்கும் ஈடு கொடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். தாக்குதலை முறியடிக்கக் கூடிய நம்பிக்கையை அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.

இராணுவத்தினரின் மனத்துணிவு உச்சக்கட்டத்தில உள்ளது. சில பத்திரிகைகளில் இராணுவ முகாம்களில் உணவுப பற்றாக்குறை இருப்பதாக வெளிவந்த செய்திகள் வியப்பைத் தருகிறது சகல முகாம்களிலும் போதியளவு உணவுப்பொருட்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நீண்டகாலத் தாக்குதல்களுக்குப் போதுமான பொருட்கள் முகாம்களில் இருக்கின்றன. இப்படிப்பட்ட தவறான செய்திகள் வெளியிடப்படுவதினால் எந்த விதத்திலும் தாஙகள் பாதிக்கப்படவில்லை என்றும் அவா மேலும் தெரிவித்தார்.

படை வீரர்களின் துணிவும் தன்னம்பிக்கையும் குறைந்து வருவதாக பத்திரிகைகளில வெளியான செய்திகள் குறித்து கேட்டதற்கு அவர் பதிலளிக்கையில் இத்தகைய செய்திகள் வெளியிடப்பட்டால் படையினரிலும் பார்க்க அவர்களது குடும்பத்தவர்களும் உறவினர்களுமே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய செய்திகளை பத்திரிகைகள் பிரசுரிக்காமல் விடுவது நல்லது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ரி-சி

# விடுமுறை நாட்களில் தபால் விநியோகிக்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

விடுமுறை நாட்களில் தபால்களை விநியோகிப்பதற்கு யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை யாழ். பிரதம தபாலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தபாலக ஊழியர்கள் தமது மறுப்பைத் தெரிவித்துள்ளனர். வடமாகாண பதில் உதவி அஞ்சல் நாயகம் எஸ். சடாட்சரநாதன் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு, சேவை மனப்பான்மையுடன் கப்பலில் வரும் தபால்களை விடுமுறை நாட்களிலும் விநியோகிப்பதற்கு முன்வர வேண்டும் என்று தபாலக ஊழியர்களைக் கேட்டுக்கொண்டார்.

ஆனால் விடுமுறை நாட்களில் தபால்களை விநியோகிப்பதற்கு தமக்கு மேலதிக ஊழியம் வழங்கப்படவேண்டும் என்றும் அப்படி ஊதியம் வழங்காத பட்சத்தில் தாம் விடுமுறை நாட்களில் தபால்களை விநியோகிப்பது மிகவும் கஷ்டம் என்றும் தபாலக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்

இதனைத் தொடர்ந்து எந்தவித முடிவும் எடுக்கப்படாத நிலையில் கூட்டம் முடிவுற்றது. இக்கூட்டத்தில் யாழ். பிரதம தபாலக அதிபர் சு. கோடீஸ்வரன் மற்றும் தபாலக உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர். -170-சி

# வறுமை நிவாரண உணவுமுத்திரைகள்வந்தன

[மானிப்பாய்[

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட பத்தாவது தொடரிலக்க வறுமை நிவாரண உணவு முத்திரைகள் யாழ். சமூக சேவைப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளன

இதேவேளை வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வறுமை நிவாரண உணவு முத்திரை பெற்றுவந்த குடும்பங்களுக்கு ஜனசக்தி திட்டத்தின்கீழ் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் தபாலகங்கள் மூலம் பணம் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. -71-சி

★ யாழ் மாவட்டத்திற்கு அனுப்ப

# கப்பலில் ஏற்றப்பட்ட 200வாட்டபம் கடற்படையால் இறக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு அனுபபுவதற்காக கொழும்புத் துறைமுகத்தில் கப்பலில் ஏற்றப்பட்ட 200 நீரிறைக்கும் இயந்திரங்கள் (வாட்ட பம்) கடற்படையினரின் சோதனையையடுத்து மீண்டும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு அனுமதி மறுத்ததாலேயே இவ் நீரிறைக்கும் இயந்திரங்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு கடற்படையினர் அனுமதிக்காததுடன் அவற்றை கப்பலில் இருந்து இறக்கியுள்ளனர்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதியைப் பெற்று அவற்றை மீண்டும் கப்பலில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

இவ் நீரிறைக்கும் இயந்திரங்கள் யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்திற்கு எடுத்து வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 170 - கி

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை விளையாட்டுக்குழுவுக்கும் நல்லூர் வடக்கு ராஜா விளையாட்டுக்கழகத்திற்குமான ஒரு நாள் மென்பந்து துடுப்பாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிககு நடைபெறும்.

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறும்.

190-சி

## சந்திரிகாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப் போவதாக அப்போது அவர்கள் கூறியிருந்தனர்.

எதிர்வரும்30ம் திகதி அதன் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் கூட்டணியினர் சந்திரிகாவை சந்தித்து பேசவுள்ளனர். -சி

# புலிகளின் ஏவுகணைகள் பற்றி தென்கிழக்காசிய நாடுகள் கவலை

(கோலாலம்பூர்)

விடுதலைப் புலிகள் ஏவுகணைகளை பெற்றிருப்பது குறித்து தென்கிழக்காசிய நாடுகள் கவலை தெரிவித்திருப்பதாக இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

மலேசியா, சிங்கப்பூர் சென்றுள்ள திரு. கதிர்காமர் அந்நாட்டு தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் பின் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்தப் பிராந்தியத்தில் பல தீவிரவாதக் குழுக்கள் இருக்கின்றன. அவற்றின் கைகளில் இத்தகைய ஆயுதங்கள் சிக்கினால் மிகப்பயங்கரமான நிலைமை உருவாகும். புலிகள் இந்த ஏவுகணையை பயன்படுத்தி கடந்த மாதம் இரு அவ்ரோக்களை சுட்டு வீழ்த்தியமை குறித்து மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஸியா ஆகிய நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகள் எங்கிருந்து இந்த ஆயுதங்களை பெற்றுக்கொண்டனர் என்றும் ஆனால் சர்வதேச ஆயுத விற்பனைச் சந்தையில் இவர்கள் இதனை வாங்கியிருக்கலாமென நம்பப்படுவதாகவும் தெரிவித்தார். -சி

## இந்தியாவிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அரசு இந்தியாவிடம் இராணுவ தளபாட உதவியை கோரியதும் அதனை வழங்க இந்தியா முன்வந்துள்ளதும் தெரிந்ததே. (சி)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 19-ந் திகதி ஆனையிறவு தட்டுவன்கொட்டி பகுதியில் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை தாமு, செபஸ்ரியாம்பிள்ளை நியூட்டன், ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி வீரச்சாவடைந்தார்.

இம்மாவீரரின் வித்துடல் இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு இவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு பொலிகண்டி சாந்தன் அறிவகத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம் இடம்பெறும் அஞ்சலிக்கூட்டம் நிறைவுற வல்வெட்டித்துறை ஊடாக வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு புனித விதை குழியில் விதைக்கப்படும். சி

# லங்கா கல்யாணியில் தபாலும் வருகிறது

]யாழ்ப்பாணம்]

நிவாரணப் பொருட்களுடன் வடபகுதி வரும் ''லங்கா கல்யாணி'' என்ற கப்பலில தபால் பொதிகளும் அனுப்பி வைக்கப்படுவதாக கொழும்பிலுள்ள அத்தியாவசியசேவைகள ஆணையாளர்வடமாகாண பதில் உதவி அஞ்சல் நாயகம் எஸ். சடாட்சரநாதனுக்கு அறிவித்துள்ளார்.

வடபகுதிக்கு பொருட்களை ஏற்றிவரும் ஒவ்வொரு கப்பலிலும் தபால் பொதிகளை காலம் தாழ்த்தாமல் உடனடியாகவும் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அஞ்சல் நாயகம் அத்தியாவசிய ஆணையாளரை கேட்டுள்ளார். [170 சி]

## நரோமா பயணிகளிற்கு

(யாழ்ப்பாணம்)

23 ம் திகதி செவ்வாய்க்கிழமை ''நரோமா'' கப்பலில் பயணம் செய்வதற்காக ஆசனங்களைப் பதிவு செய்த பயணிகள் அன்றைய தினம் காலை 8-00 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். ( சி)

## தாச்சிப்போட்டி இறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தால் நடாத்தப்படும் மாவட்ட ரீதியான தாச்சி சுற்றுப்போட்டியின் இன்றைய பெண்களுக்கான இறுதியாட்டம் இணுவில் சந்தை மைதானத்தில் பி. ப. 3-30 மணிக்கு அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் பி. ப. 4-30 மணிக்கு ஆண்கள் பிரிவில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி இளங்கோ வி. க. என்பன விளையாடவுள்ளன.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் ஒவ்வொரு மாதத்தின் 3வது ஞாயிற்றுக்கிழமை நடத்தும்கருத்தரங்கு இன்றுஞாயிற்றுக்கிழமைமாலை 4-00மணிக்கு அன்னைபூபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன் ''குறுகத் தறித்த குறளும் இறுகச் செறிந்த போராட்டமும்'' என்னும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார். (சி)

# இனப்பிரச்னைதீர்வுக்கு உதவ தயார் ஆஸி. அமைச்சர் வருகிறார்

[கன்பரா]

அவுஸ்திரேலியா அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் உதவி வழங்க முன்வந்துள்ளது.

சமாதானத்தை ஏற்படுத்தவும் இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்குடனும் அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் ஹரட் இவான் நாளை திங்கட்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தேசியப் பிரச்னைக்கு தீர்வு காண்பதில் சமரச நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று அவுஸ்திரேலியா 1990ம் ஆண்டிலிருந்து தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திர பிராந்திய விவகாரங்களைப் பற்றி ஆராய்வதற்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை அபிவிருத்தி செய்யவும் என அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை குறித்தும் இவர் ஆராயவுள்ளார் -ரி சி

"ஈழநாடு வாரமலர்" சிறப்புடன் வெளிவர வாழ்த்துகிறோம்!

தங்க வைர நகைகள் ஜொலிக்கும் தங்கச் சுரங்கம் **சிறிநதியா நகைமாளிகை** 2 (G) அர்ச்சுனா வீதி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரி 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Nespeper at Goneral Post office Sri Eanka under Eicence number B / 1633613.